# குருவைத் தேடி



*"என் பாதை இறைவனை நோக்கிச் செல்கிறது. நம்பிக்கையுடன் என்னோடு வாருங்கள். உங்களையும் அழைத்துச் செல்கிறேன்."*

*-டாக்டர்*

# குருவைத் தேடி

**தொகுப்பாசிரியர்: ஜானி**

வலியவந்து எமை ஆட்கொண்டு
ஊழ்வலியிலும் பங்கேற்க
எளியவனாய் எம்மிடை வந்துதித்த
**கோகுலக் கண்ணன் -**
இடையர்கோன் குழலில் கட்டுண்ட கோபியர்போல்
அநுதினமும் எக்கணமும் அவன் நினைவில்
கட்டுண்டோம்!

வெளியீடு:

நித்யமல்லி
புதிய எண்-6 (பழைய எண்-1),
ராஜீவ் நகர், பெருங்குடி,
சென்னை-600096.

# பொருளடக்கம்

முகவுரை

அறிமுகம் 1

தேடல் பயணங்கள்: 1995 -1998

1995 - ஜூலை: சென்னை: 8

1995- ஆகஸ்ட்: சென்னை:

1995 - ஆகஸ்ட்: கோனே ஃபால்ஸ்: 9

1995 - செப்டம்பர்: ஹரித்வார் - ரிஷிகேஷ்:

1995 – செப்டம்பர்,6 : சென்னை:

1995 - அக்டோபர்: மதுரை - பழமுதிர்சோலை: 10

06.01.1996 - பட்டினத்தார் கோவில் : 11

பானிபட் தேடல்: 12

1996 - டெல்லி :

1996 - பிப்ரவரி – அந்தர் கங்கா :

1996 - ஜூலை : சுருளி ஃபால்ஸ்: 13

1996 - அக்டோபர் -: பட்டினத்தார் கோவில்: 14

1996 - நவம்பர் -: கன்யாகுமரி -

அகஸ்தீஸ்வரம் - திருவனந்தபுரம்: 15

1996 - தென்காசி:

பாபநாசம் - திருப்பதி: 16

1996 - நவம்பர் - சென்னை :

1996 - டிசம்பர் -: கன்யாகுமரி - முட்டம்: 17

1997 – ஜனவரி 31 - சென்னை:

1997 - பிப்ரவரி -: திருநெல்வேலி: 18

1997- மார்ச் 9 : சென்னை - புரசைவாக்கம் :

1997 - ஏப்ரல் – மே - திருபுவனம்: 19
பச்மடி (மத்யப்ரதேஷ்):
1997-ஏப்ரல் – சூரியனார் கோவில் - திருமங்கலக்குடி: 20
1997- ஜூன்-9 : கிருஷ்ணராஜபுரம் - அந்தர்கங்கா : 21

1997- ஜூன் - ஆயக்குடி: 23

1997 - ஜூலை: சென்னை: 24
1997 - ஜூலை : அந்தர்கங்கா - ராபர்ட்சன்பேட் :

1997 - ஆகஸ்ட் : அந்தர் கங்கா - மாலூர் : 25
1997 - அக்டோபர்: அந்தர்கங்கா:

1997 - நவம்பர்: கோகர்ணம்: 26
1998 - ஜனவரி: மதுரை:
1998 - ஃபிப்ரவரி : சேலையூர் (தாம்பரம்) :
1998 - ஃபிப்ரவரி 8ம் தேதி: அம்மா வீட்டில்: 27
சதாசிவக்கோனே:

## தேடல் பயணங்கள்: 2005 - 2007

2005 - ஜூலை: அந்தர்கங்கா - கைவாரா : 29
2007- டிசம்பர் 2: அந்தர்கங்கா - கூடுமலை - 31
கார்த்திகை சோமவாரம்:

## நேருக்கு நேர் காணல்

1996 - ஜூலை - மைதிலி சிவராமன் கண்டது : 36
1996 -அக்டோபர் - 21: மின்சார ரயிலில்:
1997- ஏப்ரல்: சென்னை:
1997 - ஜூலை -: அடையார்: 37
1997 - செப்டம்பர் : பங்காரப்பேட்டை ஸ்டேஷன் : 38
1998 - நவம்பர் 2 - :ரிஷிகேஷ்:
2001 – டிசம்பர் - 27: பெசன்ட் நகர் சர்ச்:
2002 – அம்மா - கும்பகோணம் அருகே : 40
கேசவன் அனுபவம்:

ஜானி : 41
மோபரீஸ் சாலை:
டெய்லர்ஸ் ரோடு - கீழ்பாக் கார்டன் சாலை: 43
ஐ சி ஃப் காலனி : 44
1998 – பிப்ரவரி - இந்திராநகர் - மத்ய கைலாஸ்:
குரோம்பேட்டை - பல்லாவரம் ஸ்டேஷன் 45
கீழ்பாக்கம் கார்டன் சாலை :
பெங்களூர் - R.T. நகர் : 46
பெங்களூர் - Langford garden :
பெங்களூர் - K.R.புரம் – 10-03-2011
முத்துக்குமார் அனுபவங்கள் : (சென்னை). 50
முதல் அனுபவம் : 25.12.2008 :
இரண்டாவது அனுபவம் : 06.02.2009: 51
மூன்றாவது அனுபவம்:-25.01.2011: 52
ஆகஸ்ட் - 2010: ராஜி: 54
பின்னுரை 56

“

*“யார் முகம் பார்த்தால் வழி தவறாதோ*
*யார் குரல் கேட்டால் புலன் அதிராதோ*
*யார் நிழல் அடைந்தால் மனம் அலையாதோ*
*அவர் முகம், அவர் குரல், அவர் நிழல் சரணம்!*
*குரு நிழல் சரணம்!”* *(திரு.ரவி)*

-தொகுப்பாசிரியர்

# முகவுரை

இறைவன், ஆன்மிகதாபமுடையவர்க்கு வழிகாட்டக்கருதி அவ்வப்பொழுது வானோர்களில் சிலரை வையகத்துக்கு அனுப்பி வைக்கிறான். அத்தகையப் பெரியோர், ஆன்மிகதாகம் கொண்டோரை, குருவாக ஆட்கொண்டு நல்வழி காட்டுகின்றனர். இறைவனே கூடச் சில தருணங்களில் தானே குருவாய் வடிவெடுத்து வந்து இறை நாட்டமுடையவர்களை அரவணைத்துக் கொள்கிறான். அதுபோல் எங்களைத் தேடிவந்து ஆட்கொண்ட எங்கள் குருநாதர் இறைவனே என நாங்கள் பலப்பல அனுபவங்களின் வாயிலாகத் தெரிந்து கொண்ட உண்மையை இனிவரும் பக்கங்களில் இதனைப் படிப்பவர் அறியக்கூடும்.

இயேசுகிறிஸ்து மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்தார். எங்கள் குருநாதர் டாக்டரும், மூன்றுநாளில் திரும்பி விடுவேன் என்றார். அவ்வாறே அவர் உயிர்த்தெழுந்ததுடன், அதனைச் சீடர்கள் அறியவேண்டி, அவர்களுக்கு (சீடர்களுக்கு) நேரடியாகவும், சீடர் அல்லாதவர் மூலமும் பல இடங்களில் தன்னைக் காட்டியிருக்கிறார்! இவ்வுண்மையை, இந்நூலைப் படிப்பதன் மூலம் எவரும் அறியலாம்.

எங்கள் குரு, வானோர் இரண்டாயிரம் பேர் கீழிறங்கி வந்திருக்கிறார்கள் என்று அவ்வப்போது கூறுவார். இப்புவியை, நன்மக்களைக் காக்க வேண்டி, இறைவனது ஆணைப்படி வந்திறங்கியிருக்கிறார்கள். இன்று உலகில் காணப்படும் துர்ப்போக்கும், துர்ச் சம்பவங்களும் ஒரு முடிவுக்கு வர வேண்டுமல்லவா! புவியில் ஒரு showdown (ஷோடௌன்) நிகழும் என்று எங்கள் குரு கூறியிருக்கிறார். அவ்வாறு நாளை நிகழ வேண்டியே இன்று இத்தகைய நிகழ்வுகள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றனவோ?

**அந்நாளை ஆவலுடன் எதிர்நோக்கிக் காத்திருக்கிறோம்!**

*“யார் முகம் பார்த்தால் வழி தவறாதோ*
*யார் குரல் கேட்டால் புலன் அதிராதோ*
*யார் நிழல் அடைந்தால் மனம் அலையாதோ*
*அவர் முகம், அவர் குரல், அவர் நிழல் சரணம்!*
*குரு நிழல் சரணம்!”* *(திரு.ரவி)*

-தொகுப்பாசிரியர்

* * * * *

# அறிமுகம்

உலகைப் பொருத்தவரை இறந்து விட்டதாகக் கருதப்பட்டத் தங்கள் நாயகரை, குருநாதரைத் தேடிச் சீடர்களுள் சிலர் பல இடங்கள் பயணித்துக் கண்ட அனுபவங்கள் பற்றிய கட்டுரை இது.

சாதாரணமாக, இறந்து விட்ட ஒருவரைத் தேடிக் கண்டு பிடிக்க, அவருடன் மீண்டும் சேர எவரேனும் முற்படுவரா? ஆனால் சீடர்களுள் சிலர் முற்பட்டனர், முனைந்தனர். ஏன்?

தங்கள் குருநாதரின் சக்தியை, செயல்பாட்டை அறிந்தவர் என்ற வகையிலும், அவர்களுள் அவர் விதைத்த ஆழ்நம்பிக்கை, மற்றும் அவர் அவ்வப்போது காட்டிய, கூறிய வழிகாட்டுதல்கள் ஆகியவற்றின் அடிப்படையிலும் எனத் தேடல்கள், அவர் இறந்ததாகக் கருதப்பட்ட பின்னர் தொடங்கியது, தொடர்ந்தது. அத்தேடலில், பல ஊர்களில் அவர்களுக்குக் கிடைத்த ஆதாரங்கள் அவர் அங்கெல்லாம் இருந்ததை ஊர்ஜிதம் செய்வதாய் அமைந்தன.

**டாக்டர்** பற்றிய தன் அனுபவங்களை, **THE CATALYST** என்ற தொகுப்பில் திருமதி ஷோபனா ரவி அவர்கள் கூறியிருப்பதிலிருந்து சிலவற்றை இங்கே குறிப்பிட வேண்டும். **டாக்டர்** அவரிடம் ஒருசமயம், தான் ஒரு 'காளான்' (Mushroom) போல் வந்து போக மாட்டேன் என்று கூறியிருக்கிறார். அதாவது, இப்பிறவி எடுத்தது ஒன்றைச் சாதிக்க வேண்டியே, காரணம் கருதியே என்று உணர்த்தியிருக்கிறார். மற்றொரு சமயம், "நீங்கள் ஷோடௌன் (Showdown) பார்க்க வேண்டாமா?" என்றும் கேட்டிருக்கிறார்.

அவரின்றி ஏது 'ஷோடௌன்'? அவர் ஒரு சிலரைக் கரையேற்ற மாத்திரமே பிறவியெடுக்கவில்லை. ஜாதி, மத, இன, மற்ற பேதங்களைக் களையெடுக்க, நன்மக்கள் துயர் தீர்க்க, உலகம் உய்ய, மற்றும் உலகில் சத்ய தர்மத்தை நிலைநாட்ட அவர் பிறப்பெடுத்தார். ஆகவே அவர் எங்ஙனம் ஒரு காளான் போல வந்து போகக் கூடும்? ஒரு சாதாரண மனிதனைப்போல ஒரு

விபத்தில் மடியக்கூடும்? தன் சீடர்களது கர்மவினையைத் தன் தோளில் தாங்கிக் கரைக்கக்கூடிய அவர் எப்படி கர்மவினைக்கு ஆளாகி மறையக்கூடும்? அவர் உரைக்கும் ஒவ்வொரு வார்த்தைக்கும் பொருளுண்டு. அவர் கூறும் ஒவ்வொன்றும் நிகழாமல் போவதில்லை என்பதை சீடர்கள் நன்கறிவர். அப்படியிருக்க, அவர் ஒரு காளான்போல் இவ்வாறு மறையக்கூடுமோ? 'ஷோடௌன்' நிகழாது போகுமோ?

**டாக்டர்** மறைந்த பிறகு (தன்னை மறைத்துக் கொண்ட பிறகு) திருமதி ஷோபனா ரவி (இனி அம்மா என்று குறிப்பிடலாம்) மனமுடைந்து போனார். ஒரு சில நாட்கள் முன்னர்தான் **டாக்டர்** இவரிடம், தான் ஒரு திட்டம் வைத்திருப்பதாகவும், மேலும் 29 நல்ல நாள் என்றும் சொல்லியிருக்கிறார். (29 ஜூன் 1995 அன்று தான் விபத்து நிகழ்ந்தது). அன்று ஏனோ அவர்களுக்கு இதுபற்றி **டாக்டரிடம்** தெளிவாகக் கேட்கத் தோன்றவில்லை. "**டாக்டர்**, எங்கே போய் விட்டீர்கள்? அழகிய காவியமான நீங்கள் இப்படி முடிய வாய்ப்பில்லையே. இப்படி நீங்கள் விடைபெறுவதென்றால் அவ்வாறான அனுபவங்கள் எங்களுக்குக் கிடைத்திருக்க வேண்டியதில்லையே. நீங்கள் சென்றது ஒரு முத்தாய்ப்பாக இருக்க முடியாது. அதில் காவிய தர்மம் இல்லையே. கதை முடிந்தது என்பதை என் உள்ளுணர்வு ஒப்புக்கொள்ள மறுக்கிறது. நீங்கள் ஏன் இப்படிக் காயை நகர்த்தியிருக்கிறீர்கள்?" என்றெல்லாம் புலம்பினார். அதற்கு **டாக்டர்** அவரிடம் மௌன மொழியில், தான் நன்றாக ஆகி விட்டதாயும், விரைவில் திரும்பி வருவதாயும், தனக்காகக் காத்திருக்குமாறும் கூறினார். மேலும், அம்மாவின் அனுபவத்தில், **டாக்டர்** ஒரு சாதாரண மனிதர் இல்லை எனவும், பஞ்ச பூதங்களும் அவருக்குப் பணிந்திருந்தன என்பதனையும், உடலைத் துறந்து மீண்டும் அதை ஏற்றுக் கொள்ளும் வல்லமை உடையவர் அவர் எனவும், எல்லாச் சூழ்நிலையிலும் அவர் தலைவனாகவே விளங்கினார் எனவும் அம்மா நன்கறிவார். தனக்குக் கிட்டிய அனுபவங்களின் அடிப்படையிலும், **டாக்டரைப்** பல கோணங்களில் தரிசிக்கும் வாய்ப்புக் கிட்டிய நிலையிலும், **டாக்டர்** இன்னார் என்று அனுபவபூர்வமாக அறிந்திருந்த நிலையிலும், நவகோள்களும் அவருக்குக் கட்டுப்பட்டிருக்கக் கூடிய உயர்ந்த ஸ்தானத்தில் அவர் இயங்குவதைக்

கண்டநிலையிலும் என, அம்மா **டாக்டரின்** கட்டுகளுக்குட்படாத, வரையரையற்ற அவரது சக்தியை நன்றாகவே அறிந்தவர். ஆதலால், '**டாக்டர்** எங்கும் செல்லவில்லை, உடலைத் துறக்கவில்லை-மாயையையே தன் கட்டுக்குள் வைத்திருக்குமவர் சில காரணம் கருதி அதுபோல் ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்கி அவ்வாறு செய்திருக்கிறார் –அவர் எந்நேரமும் வெளி வருவார், ஆகவே அவரைத் தேடிக் கண்டு ஒன்று சேர்வது நம் கடமை' என அம்மா உணர்ந்தார். இதுவே தேடலுக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது. தன் மேற்குறிப்பிட்டப் புத்தகத்தில், "சித்த புருஷர் சமாதி நிலையை எட்டும் போது உடலை இயக்கமற்ற நிலையில் இருத்தி வைப்பார். அதே நிலையில் நெடுங்காலம் இருக்க முடிவு செய்தார் என்றால் தம் பக்தரையோ, சீடரையோ தம் உடலைப் புதைத்து விடுமாறு பணிப்பார். இப்படி அடக்கம் செய்து விட்ட பிறகு, வேறு இடத்துக்கும், சூழ்நிலைக்கும் மாறிவிட அவர் முடிவு செய்தால் தம் உடலை பூமியிலிருந்து வேறு இடத்துக்கு அப்புறப்படுத்தி மீண்டும் எடுத்துப் பூண்டு கொள்வார். **குழந்தையானந்த ஸ்வாமிகள்** என்ற மஹான் இத்தகையவர்களுள் ஒருவர். மூன்று வெவ்வேறு இடங்களில் மூன்று முறை புதைக்கப்பட்டவர்" என்று குறிப்பிட்டுள்ளார். இத்தகைய ஆற்றல் பெற்ற **டாக்டரால்** திரும்பி வருவது என்பது ஒரு முடியாத செயலல்ல என்பதை அம்மா நன்கறிவார். 'தேடல்' பயணத்திற்கு இதுவும் ஒரு காரணம். மேற்குறிப்பிட்டதுபோல், அதனைத் தன் கடமையெனக் கருதினார்.

இது ஒருபுறமிருக்க, **டாக்டர்** மறையத் தீர்மானித்த சில நாட்களுக்கு முன்னர், ஜூன் 1995ல் ஒரு நாள், திருமதி சாந்தம்மாவிடம், **டாக்டர்**, 'தனக்குக் கீழேயும் வேலை செய்ய முடியவில்லை, மேலேயும் வேலை செய்ய முடியவில்லை. அதனால் போகிறேன். ஆனால் திரும்ப வருவேன்' என்றிருக்கிறார். மேலும், "என்னைத் தொட்டுப் பார்த்தால் தான் நம்புவீர்களா? இயேசு உயிர்த்து வந்த போது தாமஸ் அப்படித்தான் கேட்டார். நீங்களும் அப்படித்தான் கேட்பீர்களா?" எனக் கேட்டார். இதைக் கேட்டு மனமுடைந்துபோன சாந்தம்மாவிடம், ஆறுதலளிக்கும் வகையில், 'தான் எங்கெங்கிருப்பார் என்பதை நேரடியாக அவருக்கோ, அல்லது அவ்வப்போது யார் மூலமாகவும் தெரிவிப்பதாக' **டாக்டர்** உறுதி கூறினார். அவர் ஏன்

அவ்வாறு கூறினார்? தான் மீண்டும் திரும்பி வருவேன் என்று உணர்த்தவே அவ்வாறு கூறியிருக்கிறார்.

இது நடந்த சில நாட்களில் சாந்தம்மா, ஜூன் 29ம் தேதி அன்று காலை 8.45 மணிக்கு, **டாக்டர்** தினத்தந்தி ஆஃபீஸ் அருகில் விபத்துக்குள்ளாகி அரசாங்கப் பொது மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டிருக்கிறார் என்பதை அன்று மாலை 6 மணிக்கு அம்மாவிற்கு வந்த ஃபோன் மூலம் அறிந்தார். உடனே, அவருடன் எஞ்சினீயர், அவரது மகள் வித்யா, சம்பந்தம் மற்றும் ரேவதியும் இரவு 10 மணிக்கு பொது மருத்துவ மனைக்கு விரைந்தனர். அச்சமயம் **டாக்டருக்கு** அறுவை சிகிச்சை நடந்து கொண்டிருப்பதாக அறிந்தனர். இரவு 11 மணியளவில் அறுவை சிகிச்சை முடிந்து **டாக்டரை** ஸ்ட்ரெச்சரில் கொண்டு வந்தார்கள். அப்போது அதில் கிடத்தப்பட்டிருந்தவரைப் பார்த்த எஞ்சினீயர், “அவர் **டாக்டர்** போல் இல்லை, வேறு யாரோ போல் இருக்கிறார்” என்றார். ஆனால், அவரை ICU வில் இரண்டாவது படுக்கையில் கிடத்திய பின் சாந்தம்மா பார்த்தபோது அவர் **டாக்டராகத்தான்** அவருக்குத் தெரிந்தார். மறுநாள் (ஜூன்’ 30) காலை மணி 6.30 க்கு சாந்தம்மா மருத்துவ மனைக்குச் சென்று பார்த்தபோது, முதலாவது படுக்கையில் **டாக்டர்** அனந்தசயனத்தில் சிரித்துக் கொண்டு, மிகவும் ஆனந்தமாகப் படுத்திருந்திருக்கிறார். இதைக் கண்டவுடன் சாந்தம்மா சந்தோஷத்துடன், “**டாக்டர்**, நன்றாகி விட்டீர்களா?” என்று கூறிக்கொண்டே விரைந்து அவரிடம் நெருங்க, அங்கே வேறொருவர் படுத்திருக்கக் கண்டார். வருத்தம் அவரைத் தாக்கியது. ஜூலை1ம் தேதி அம்மாவுடன், சாந்தம்மாவும், சாந்தியும் ஆஸ்பிட்டலுக்குச் சென்றனர். ஆனால், அவரைப் பார்க்க முடியாது போயிற்று. மறுநாள், ஜூலை 2ம் தேதி, **டாக்டரின்** சீடர் ஜானியின் வீட்டில், துக்கமான சூழ்நிலையில் அந்த மாத சத்சங்கம் நடைபெற்றது. அச்சமயம் டெல்லியிலிருந்து ஹரி, ஜமுனாவிடமிருந்து வந்த செய்தியில், **டாக்டர்**, ஊடகர் வாயிலாக, “நான் எங்கும் போய்விடவில்லை. நான் மறுபடியும் வருவேன். உங்கள் ஒவ்வொரு வரையும் தேவைப்படும் போதெல்லாம் சந்திப்பேன். உங்களுடன் வந்து இருப்பேன்.” என்று கூறியிருப்பதாக அறிந்தனர். அதனால் எல்லோரும் நிம்மதி அடைந்தனர். மகிழ்ச்சியுற்றனர்.

**டாக்டர்**, கிளினிக்கில் சில நேரங்களில் சொல்லியிருக்கிறார், “தனக்கு எது நேர்ந்தாலும், மூன்று நாழிகைகளுக்கு, அல்லது மூன்று நாட்களுக்குத்தான் அப்பாதிப்பு இருக்கும், அதன் பிறகு சரியாகி விடுமென்று.” அதனால் அன்பர்கள் மனத்தில் நிம்மதியுடனும், மகிழ்வுடனும் சத்சங்கத்தை நிறைவு செய்தனர். மறுநாள், 3ம் தேதி, காலையில் தியானம் முடித்தவுடன், சாந்தம்மாவுக்கு **டாக்டர்** சந்தோஷத்துடன் சிரித்ததை உணர்வால் அறிய முடிந்தது. சாந்தம்மாவும் மகிழ்ச்சியுடன் காலை மருத்துவ மனைக்குச் செல்ல, டாக்டர் காலை 7 மணி சுமாருக்கு இறந்து விட்டார் என்ற செய்தி அவருள் இடியென இறங்கியது. அச்சமயம் அவரது உடலை POST MORTOM செய்ய வேண்டி ஸ்ட்ரெச்சரில் எடுத்துச் செல்கையில் சாந்தம்மா காண, அது **டாக்டருடையது** இல்லை என அவருக்கு உறுதியாகப் பட்டது. இதையடுத்து, சவப் பரிசோதனை அறையில் பாலாஜி, வித்யா, அனந்து ஆகியோர் பார்த்துவிட்டு, அவர்களும் அது **டாக்டரல்ல** என ஒரே குரலில் கூறினர்.

4ம் தேதி **டாக்டரது** உடல் முறைப்படி அடக்கம் செய்யப்பட்டது. அதே நேரத்தில், சாந்தம்மா வீட்டில் தனித்திருந்த பாலாஜி, படுக்கையறையில் படுத்திருக்கையில், **டாக்டர்** அவர் அருகே லுங்கி, பனியனில் நின்றிருக்கக் கண்டார். பாலாஜிக்கு ஒன்றும் புரியவில்லை. “என்ன, எல்லோரும் **டாக்டர்** வீட்டிற்குச் சென்றிருக்கிறார்கள், ஆனால் **டாக்டர்** இங்கே இருக்கிறாரே” என்று யோசித்துக் கொண்டே ஏனோ உறங்கி விட்டார். **டாக்டரின்** நண்பர் பரஸ்மலின் மகன் அன்று காலை 7 மணிக்கு **டாக்டர்** இறந்த செய்தி கேட்டு, பூமாலை வாங்கிக்கொண்டு பைக்கில் **டாக்டர்** வீடு நோக்கிச் செல்கையில், பதற்றத்தில் திசை தடுமாறி ஓட்ட, “பார்த்துப் போப்பா” என்ற குரல் கேட்டு, யார் என்று திரும்பிப் பார்க்க, **டாக்டர்** தனது ஸ்கூட்டரில் சென்று கொண்டிருக்க கண்டு ஆச்சரியமும், திகைப்பும் அடைந்தார்.

மேலும் கேசவன், உடல் அடக்கம் செய்யப்படுவதற்கு முன்னர், அன்று காலை, **டாக்டரின்** உடல் கிடத்தியிருக்கையில் **டாக்டரின்** பாதத்தைப் பிடிக்க, அவரது விரல் தன்னுடைய சுண்டு விரலை சுண்டி விடக் கண்டார். மறுமுறை இடுகாட்டில் அவர் கால்களைப் பற்றியிருந்த தனது விரல்களில் அவருடைய நாடிதுடிப்பதை உணர்ந்ததாயும், மிகத்துல்லியமாக அவர் பாதத்தில் ரத்த

ஓட்டத்தையும், தன்னால் நன்கு உணர முடிந்தது எனவும் அவர் அன்றே கூறினார். அதைத் தன்னுடனிருந்த மற்றொரு சீடரிடமும் உடனே கூறியிருக்கிறார். என்ன அதிசயம்! ஒரு 'சவப் பரிசோதனை' செய்யப்பட்டிருந்த உடலில் எங்ஙனம் நாடித் துடிப்பு காணக்கூடும்?

இத்தருணத்தில் ஒன்று கூறவேண்டும். அதாவது, **டாக்டர்** தன் சீடர்களுடன் பலவிதங்களில் தொடர்பு கொள்வார். நேரடியாக மட்டுமின்றி, கனவின் மூலம், தியானத்தில், பிறர் மூலம், காதில், மனதில் எண்ணம் மூலம், அசரீரியாக, உள்ளுணர்வால், செய்திகளின் மூலம், ஊடகர் வழி எனப் பலவிதங்களில் தொடர்பு கொள்வார். அத்தகைய வழிகளில் கிட்டிய செய்திகளைக் கொண்டே தேடல்கள் இயங்கின. அனுமானங்கள், ஊகங்கள் இவை கொண்டு செயல்பட்டால் தோல்வியே கிட்டும். ஆகவே, மேற்குறிப்பிட்ட ஆதாரங்களைக் கொண்டே பயணங்கள் அமைந்தன. அவற்றிலும் ஒரு சில எந்த ஆதாரமும் கிட்டாது தோல்வியில் முடிந்தன. ஒருவேளை அணுகுமுறையில், சீடர்கள் கிரகித்த விதத்தில் ஏதேனும் குறைகள் இருந்திருக்கக் கூடும்.

மேலும் ஒன்று குறிப்பிட்டாக வேண்டும். அதாவது, **டாக்டர்** எங்கெங்கெல்லாம் சென்றிருந்தாரோ அங்கெல்லாம் ஓரிருவருக்காவது ஓர் ஆழமான உணர்வை (impression) மனத்தில் ஏற்படுத்தியிருப்பார். அதனால்தான் அச்சிலருக்காவது அவர் அங்கே காணப்பட்டதை உறுதியாகத் தெரிவிக்க இயன்றது. இதுவும் **டாக்டரின்** விளையாட்டே! சில இடங்களில், சிலரிடம் விசாரிக்கையில், அவ்வாறு கண்டவர் விளக்க முற்படுகையில் ஒரு பரவசநிலைக்குச் சென்று விடுவதைச் சீடர்கள் கண்ணுற்றனர்.

தேடல்களின்போது **டாக்டரின்** சில புகைப்படங்களைக் காட்டி அவ்விடங்களிலுள்ள பலரிடம் கேட்பதை அவர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். சிலர் பார்த்ததில்லை எனவும், சிலர் பார்த்திருந்ததாகவும் கூறுவர். ஆனாலும், சீடர்கள், அவ்வாறு பார்த்ததாகக் கூறியவர்களின் பேச்சை அப்படியே ஏற்றுக்கொள்வதில்லை. சிலர், உண்மையாகவே சொல்வர். பலர், ஏதோ கேட்டார்களே, அவர்களுக்கு திருப்தி தரும் வகையில் கூறிவிட்டுப் போகலாமே என நினைத்தும் பார்த்ததாகக் கூறுவர். ஆகவே,

இத்தருணங்களில், அவர்களது பதில் கூறும் விதத்தைக் கொண்டும், உள்மனதுக்குத் தோன்றியபடியும், அவர்கள் அவற்றை ஏற்றோ, ஏற்காமலோ இருப்பர். அவ்வாறு செயல்பட்டதில் உண்மை உணர்த்தப்பட்டது எனலாம். அதாவது, கீழ்க்குறிப்பிடப்பட்ட தேடல் பயணங்கள், **டாக்டர்** அவ்விடங்களில் இருந்ததை உறுதிப்படுத்தியது. எதன் அடிப்படையில் தேடல் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டனவோ, அத்தகைய செய்திகளோ, கனவுகளோ, அகக்காட்சிகளோ உண்மையே என நிரூபிக்கப்பட்டன. இதில் ஒரு விசேடம் என்னவென்றால், **டாக்டரின்** சீடரல்லாதவர் மூலமும் கிட்டிய செய்திகளும், கனவுகளும் கூட உண்மையென நிரூபிக்கப்பட்டன. அதாவது, **டாக்டர்** தன் இருப்பிடங்களையெல்லாம் அவ்வப்போது மேற்சொன்ன முறைகளில் சீடர்கள், மற்றும் சீடரல்லாதவர் மூலம் தெரியப்படுத்தி அவர்களை அவ்விடங்களுக்கெல்லாம் வருமாறு செய்தார். பல செய்திகள், முன்பே அங்கெல்லாம் அவர் இருந்ததைப்பற்றியும், சில, நிகழ்கால மற்றும் எதிர்கால இருப்பினைக் குறித்தும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டன.

இத்தகைய தேடல்களில், அம்மாவுடன் மேலும் ஐவர் (ஆக ஆறு நபர்கள்) இயற்கையாகவே இணைந்தனர். அவர்கள்-திருமதி சாந்தம்மா, திருவாளர்கள், கேசவன், எஞ்சினீயர் சுப்ரமணியன், அனந்து மற்றும் ஜானி. இவர்களில், சாந்தம்மா, அம்மாவுடன் எல்லாப் பயணங்களிலும், மற்றவர்கள் அம்மாவுடன், சிலவற்றிலுமாகப் பங்கு கொண்டனர். ஓரிரு தேடல்களில் திருமதி சாந்தி, திரு.ரமேஷ், மற்றும் ஒரு சிலரும் உடன் வந்தனர்.

***********

## *தேடல் பயணங்கள்: 1995 -1998*

**1995 - ஜூலை: சென்னை:**

ஒருநாள் மதியம் அம்மாவுக்கு **டாக்டரிடமிருந்து** ஃபோன்கால் வந்தது. (அது கனவில் வந்த அழைப்பா, அல்லது நிஜமாகவே வந்ததா என அவரால் அனுமானிக்க இயலவில்லை). “எங்கிருந்து பேசுகிறீர்கள், **டாக்டர்**?” எனக் கேட்டதும், தான் புரசைவாக்கத்தில் ஒரு மாடியிலுள்ள கடையிலிருந்து பேசுவதாகவும், நன்றாக ஆகிவிட்டதாயும் கூறுகிறார். “எங்கிருக்கிறது அந்த இடம்? நான் வந்து பார்க்கட்டுமா?” எனக் கேட்க, **டாக்டர்** டெலிஃபோன் பாக்ஸைத் தட்டி, ஏதோ சரிவரக் கேட்காததுபோல் அழைப்பைத் துண்டித்து விடுகிறார். புரசைவாக்கத்தில் தேடும் படலத்துக்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது.

**1995- ஆகஸ்ட்: சென்னை:**

ஒரு நாள் அம்மா விடியற்காலையில் கண்ட அவரது கனவில் அவர், மணி, மற்றும் ஒரு சில சீடர்களுடன் பேசிக்கொண்டிருக்கிறார். அப்போது அங்கே **டாக்டர்** நின்று கொண்டிருக்கிறார். “சீக்கிரம் வாங்க **டாக்டர்** “ என அம்மா கேட்டதற்கு, அவரது காதில் **டாக்டர்**, “போனால் தானே வருவதற்கு!” என்கிறார். **டாக்டர்** தன்னிடம் ஏன் காதில் வந்து கூறுகிறார் என்று அவர் தனக்குள் நினைக்கிறார். இக்கனவு, **டாக்டர்** உயிருடனிருப்பதை உறுதி செய்வதாய் அமைந்தது.

அதே மாதம், சாந்தம்மா தியானத்திலிருக்கையில் அவரிடம் **டாக்டர்**, தான் மலைமீதிருப்பதாகவும், கவலைப்பட வேண்டாம் என்றும் கூறுகிறார். அச்சமயம் அவருக்கு அங்கு தண்ணீர் விழும் சப்தம் கேட்கிறது. நீர்வீழ்ச்சியிலிருந்து விழும் தண்ணீர் சப்தம் போல் தோன்றுகிறது.

**1995 - ஆகஸ்ட்: கோனே ஃபால்ஸ்:**

சாந்திக்கு வந்த ஒரு கனவில் **டாக்டர்** கோனே ஃபால்ஸ் அருகில் இருப்பதாக வந்தது. அதன் அடிப்படையில், அம்மா, சாந்தியுடன் அங்கு

சென்றபோது சாந்தி மட்டும், அங்கு **டாக்டர்** அமர்ந்து சிரித்துக் கொண்டிருப்பதைப் பார்த்ததாகச் சொன்னார்.

### 1995 - செப்டம்பர்: ஹரித்வார் - ரிஷிகேஷ்:

அம்மாவுடன், சாந்தம்மா, எஞ்சினீயர், வித்யா, சௌந்தரம் கிருஷ்ணன் (சாம்ராட்), சாந்தி, கேசவன், ஜானகிராமன் (ஜானி), சம்பந்தம், நிர்மலா மற்றும் நரஸிம்ஹன் ஆகிய 11 பேர் டெல்லி, ஹரித்வார், ரிஷிகேஷ், மதுரா, பிருந்தாவன் ஆகிய இடங்களுக்குச் சென்றனர். பிருந்தாவனத்தில், ஒரு கைடு, கிருஷ்ணர், மூன்று நாட்களில் திரும்பி வருவதாக கோபியரிடம் கூறியதாகக் கூற, கேசவன், “அவர் வரவில்லை. He is a cheat” என்றார். அதற்கு அவர், “இல்லை, இல்லை, “He is not a cheat” என்று மறுப்புத் தெரிவித்தார். பின்பு ஜமுனாவின் மூலம் (ஊடகர் மூலம்), அந்த கைடே **டாக்டர்தான்** என்று தெரிய வந்தது.

### 1995 – செப்டம்பர்,6 : சென்னை:

அம்மா, **டாக்டரிடம்** செப்டம்பர் மாதம், 6ம் தேதி காலை 11.30க்கு **டாக்டர்** தனது வீட்டில் தன்னுடன் உணவருந்த வேண்டும் என்று ஊடகர் மூலம் பேசும்போது கேட்டுக் கொண்டார். மறுநாள் உணவு தயாரிக்கப்பட்டு, அவரது வருகைக்காகக் காத்திருந்தார். வாசலில் அந்நேரம் சென்று பார்க்கையில் விதிக்கப்பட்ட நேரத்தில் அவரது வீட்டுவாசல் வழியாக, தோளில் ஜோல்னாப் பையுடன் ஒருவர் அவரைப் பார்த்துக் கொண்டே சென்றார். திரும்பவும், அவரது வீட்டைக் கடந்து, பார்த்துக்கொண்டே சென்றார். அவர் பார்ப்பதற்கு **டாக்டர்** போலவும் இல்லை, ஒரு கிராமத்து ஆசாமி போல் (rustic) ஆகத் தோற்றமளித்தார். ஆனால் **டாக்டராக** வரவில்லை.

### 1995 - அக்டோபர்: மதுரை - பழமுதிர்சோலை:

இச்சமயம் சாந்தம்மாவுக்கு வந்த அகக்காட்சியில் ஒரு வைஷ்ணவக் கோவிலும் (நாமம் போட்டிருந்தது), அதற்குமேல் ஒரு மலையும் இருப்பதாகத் தெரிந்தது. ஏற்கனவே சாந்தம்மா, தியானம் செய்யும்போது அருவி விழும்

சப்தம் கேட்டதாகச் சொல்லியிருந்ததால், **டாக்டரைத்** தேடி சுருளி அருவிக்குச் செல்ல முடிவு செய்யப்பட்டது. அம்மாவுடன், சாந்தம்மா, கேசவன் மற்றும் சாந்தி சென்றனர். செல்லும் வழியில் மதுரைக்கருகிலுள்ள கும்பக்கரை நீர்வீழ்ச்சிக்கும் சென்றனர். அங்கு எந்த அறிகுறியும் கிடைக்காவிட்டாலும் ஓர் அனுபவத்தின் மூலம் **டாக்டர்** அவருடைய இருப்பிடத்தை அவர்கள் அறியமுடியாதபடித் தடுக்கிறார் என்பது தெளிவாயிற்று. அங்கே சாந்தம்மா தியானத்தில் அமர்ந்து கோடிசாமியை அழைத்து **டாக்டர்** இருப்பிடம் பற்றிக் கேட்ட போது, **டாக்டர்** உடனே கோடிசாமி அருகில் வந்து நின்று அவரை ஏதும் சொல்லாதபடித் தடுத்தார். பிறகு ஏமாற்றத்துடன் அங்கிருந்து சுருளி நீர்வீழ்ச்சிக்குச் சென்றனர். அங்கும் விசாரித்ததில் **டாக்டர்** அங்கு வந்ததாக சேதி ஒன்றும் கிடைக்கவில்லை. ஆகவே அங்கிருந்து புறப்பட்டு மதுரையை வந்தடைந்தனர். மறுநாள் மதுரையில், நாமம் இடப்பட்ட கோவில் எங்குள்ளது என்று விசாரிக்கையில் அது அழகர் கோவில் என்றும், மலை அதை ஒட்டியிருந்த பழமுதிர் சோலை என்றும் தெரிய வந்தது. அங்கு சென்று கீழே விசாரித்து விட்டு மலை மீது ஒரு ஆட்டோவில் சென்றனர். பாதிவழியில் ஆட்டோ மேற்கொண்டு ஏறமுடியாமல் நின்றுவிட்டது. நால்வருக்கும் நல்ல பசி. உணவருந்த அமர்ந்தனர். அப்போது ஆஜானுபாகுவாக, கையில் நாலடி உயர வெள்ளி வேலுடன் ஒரு இளைஞர் இவர்களை நோக்கி வந்தார். தனக்கும் அவர்கள் கொண்டு வந்த உணவில் சிறிது தருமாறு கேட்க அவர்களும் தந்தனர். அவர் வேகமாகச் சாப்பிட அவர்கள் அவரிடம், மேலே மலையில் யாரும் தங்கியிருக்கிறார்களா என்று **டாக்டரை** மனதில் வைத்துக் கேட்டார்கள். முன்னர் இருந்தார்கள் என்றும், இப்போது எல்லோரும் மலையிறங்கிக் கேரளம் சென்று விட்டனர் என்றும் வந்தவர் கூறினார். கொஞ்சம் தண்ணீர் பருகிவிட்டு மேலே போட்டிருந்த துண்டை ஒதுக்கி விட்டபடி எழுந்தார். இடது கை மேற்புறத்தில் தங்கக் காப்பு! காலில் வெள்ளித்தண்டை! வந்திருந்தவர் முருகக் கடவுளோ!

பின்னர், மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் தரிசனம் முடித்து திரும்பி வந்தபோது ஒரு பெரியவர், காரருகே வந்து காசு தருமாறு கேட்டார். அவர் பார்ப்பதற்குக் குள்ளமாகவும், திட காத்திரத்துடனும், கண்களில்

தீட்சண்யத்துடனும், தலைமுடி புஜம் வரை நீண்டும் காணப்பட்டார். காசை வாங்கிக் கொண்ட அவர் காரைச் சுற்றிக்கொண்டு வந்த பின்னர் வேகமாகச் சென்று மறைந்து விட்டார். பிற்கு தேடிப் பார்த்தும் கண்ணில் படவில்லை. வந்தவர் அகத்திய முனிவராக இருக்கலாம் என்று தோன்றியது.

### 06.01.1996 - பட்டினத்தார் கோவில் :

அம்மா, ஹரி, ஜமுனா, PATS, மாலினி ஆகியோர் **THE CATALYST** புத்தக வெளியீட்டுக்காக 1996, ஜனவரி 6ம் தேதி பட்டினத்தார் கோவில் சென்றனர். அவர்கள் ஆலயத்துள் செல்கையில் யாரோ ஒருவர் அவர்களுக்காகவே காத்திருந்தது போல் அவர்களைத் தொடர்ந்து உள்ளே வந்தார். அவர்கள் புத்தகப் பிரதிகளை அர்ச்சகரிடம் கொடுத்து பூஜையில் வைக்கச் செய்தனர். இவ்வேளையில், அந்தநபர் இவர்கள் சார்பில் கற்பூரத்தை அர்ச்சகரிடம் கொடுத்தார். அம்மாவுக்கு, இவர் ஏன் கொடுக்கிறார் எனத் தோன்றியது. விபூதிப் பிரசாதம் பெற்றுக் கொண்ட அவர் மீதிப் பிரசாதத்தை தன் எதிரில் நின்று கொண்டிருந்த மாலினியிடம் தந்தார். இவர்கள் புத்தகப் பிரதிகளைப் பெற்றுக் கொண்டு கோவிலின் பின்புறத்தில் வழக்கமாக **டாக்டருடன்** அமரும் இடத்தில் உட்கார்ந்தனர். அவரும் அவர்களுடன் வந்தமர்ந்தார். புத்தகத்தைப் பிரித்துப் பார்க்கையில் அவர் PATS ன் பின்புறத்திலிருந்து எட்டிப் பார்த்தார். அம்மா அவருக்கு ஆங்கிலம் படிக்கத் தெரியுமா என நினைத்தார். பின்னர் அவர்கள் காரில் ஏறி அமர்ந்தனர். அம்மாவின் காலணியை எடுத்துவர டிரைவர் முருகன் சென்றிருக்கையில் அம்மா திரும்பிப் பார்க்க, அவர் அம்மாவையே பார்த்துக் கொண்டிருந்தார். அவர் கண்கள், **டாக்டர்** தியான நிலையிலிருந்து வெளிவரும் வேளையில் எப்படி கோவைப்பழமாகச் சிவந்திருக்குமோ அவ்வாறு இருந்தது. அக்கண்களில் பிரிவின் ஏக்கம் தெறிந்ததுபோல் தோன்றியது. அவருக்கு ஒரு பிரதி கொடுக்காமல் போய் விட்டோமே என்றிருந்தது அம்மாவுக்கு. அன்று **டாக்டரை** சாப்பிடக் கூப்பிட்ட நாளில் அம்மா வீட்டருகே வந்தவரை இவர் ஒத்திருந்தார்.

**பானிபட் தேடல்:**

சாந்தம்மாவுக்கு வந்த கனவில், **டாக்டர்** மலையடிவாரம் அருகில், ஒரு வீட்டின் திண்ணையில் அமர்ந்திருப்பதாகப் பார்த்தார். அச்சமயம், பானிபட் என்ற பெயர்ப் பலகையுடன் ஒரு வெள்ளை நிற பஸ் ஒன்று கடந்து சென்றது. அதனால், அவ்வூர், வேலூர் அருகிலிருப்பதாக அறிந்து, அவ்விடத்துக்கு, அம்மா, சாந்தம்மா, அனந்து, கேசவன், ஜானியும் சென்று பார்த்தனர். அங்கு எந்த தகவலும் கிடைக்கவில்லை.

**1996 - டெல்லி :**

ஒருநாள் டெல்லியில், ஹரியும், ஜமுனாவும் அலுவலகத்திலிருந்து வீடு திரும்புகையில், அவர்களுக்கு முன்பாக ஒரு மொபெடில் **டாக்டர்** செல்லக் கண்டு, அவரைப் பத்து கிலோ மீட்டர் தூரத்துக்குப் பின் தொடர்ந்துசென்று நேருக்கு நேராகப் பார்க்கையில், அவரது முகம் வேறாக இருக்கக்கண்டு ஏமாற்றமுற்றனர்.

**1996 - பிப்ரவரி - அந்தர் கங்கா :**

**டாக்டர்** அந்தர்கங்காவில் இருப்பதாக அம்மாவிற்கு உள்ளுணர்வில் தோன்ற, அம்மாவுடன், சாந்தம்மாவும், அனந்தும் சென்றனர். அங்கே கீழே ஒரு காட்டிலாகா ஊழியரிடம் **டாக்டரின்** ஃபோட்டோவைக் காட்டிக் கேட்டதற்கு அவர், கார்த்திகை முதல் சோமவாரத்துக்கு 3 நாட்கள் முன்னால் மேலே சிவன் கோவிலுக்கு தான் வந்தபோது அங்கே கையில் ஒரு பையுடன் நின்றிருந்தவரைப் பார்த்து, 'எப்படி இங்கே வந்தீர்கள்?' என்று கன்னடத்தில் வினவ, அவர், "இரவு இங்கே தங்கியிருந்தேன்" என்று சொல்ல, "இங்கே யாரும் தங்க கூடாது. நீங்கள் யார் எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று கேட்க, "நான் சென்னையிலிருந்து வருகிறேன்" என்று அவர் அரைகுறை கன்னடத்தில் சொல்லவும், இவருக்குக் கன்னடம் சரியாக தெரியாது என்று புரிந்துகொண்ட அந்த காட்டிலாக்கா அதிகாரி, அவர் தோற்றத்தைப் பார்த்து அவரும் அதிகாரியாக இருக்கலாம் என எண்ணி, அவரிடம் கடுமையாகப் பேச விரும்பாமல், "இங்கே இரவில் யாரும் தங்கக் கூடாது கீழே போய்விடுங்கள்"

என்று சொன்னாராம். மறுப்பேதும் சொல்லாமல் அவரும் கீழே இறங்கிப் போய்விட்டாராம். ஃபோட்டோவில் உள்ள நபர்தான் அவர் என்றும் சொன்னார். அதன் பிறகு, தான் அவரைப் பார்க்கவில்லை என்றார்.

**1996 - ஜூலை : சுருளி ஃபால்ஸ்:**

**டாக்டர்** சுருளிஃபால்ஸில் இருப்பதாக ஒருவருக்குக் கனவு வந்ததைக் கொண்டு, அம்மா, சாந்தம்மா, அனந்து, கேசவன், ஜானி, எஞ்சினீயர், மணி, ஆகியோர் அங்கு சென்றனர். மலை மேல் செல்வதற்கு முன் அனுமதி பெற வேண்டும் என்றனர். அங்கிருந்த காட்டிலாகா ஊழியர்களிடம் **டாக்டரின்** ஃபோட்டோவைக் காட்டிக் கேட்டதில், அர்ஜுனன் என்ற இளைஞர் சில நாட்கள் முன்னால் இருவர் மலை மீது சென்றதாகவும், அதில் ஒருவர் ஒல்லியாக, உயரமாக, தோளில் ஜோல்னாப் பையுடனும், மற்றவர், சிவப்பு நிறத்தில், குள்ளமாக, காவியுடையில், ஜடாமுடியுடன் காணப்பட்டதாயும் கூறினர். அவர்கள் உணவுக்கு வேண்டி ஒரு பொருளும் கையில் கொண்டு செல்லாதது அர்ஜுனனின் கவனத்தை ஈர்த்தது. இது கழிந்து ஒரு வாரத்துக்குப் பிறகு அர்ஜுனன் வேட்டைக்குச் சென்றபோது, அடர்ந்த வனப்பகுதியில் ஒரு நீரோடைக்கு அருகில் அவர்கள் இருவரையும் பார்த்தாராம். குள்ளமாக இருந்தவர் ஓடையில் நீராடி விட்டு வந்தாராம். மற்றவர் சற்று மேலே மரத்தடியில் அமர்ந்திருந்தாராம். அவர் எவ்வாறு அமர்ந்திருந்தார் என வினவுகையில், அர்ஜுனன் அமர்ந்து காண்பித்தவிதம், **டாக்டர்** வழக்கமாய் அமரும் விதமாய் இருந்தது. அதற்குப் பிறகு இருவரையும் அர்ஜுனன் பார்க்கவில்லையாம். இத்தகவல்களைத் தந்த அர்ஜுனன் அம்மாவையும், மற்றவர்களையும் மலைக்கு மேல் அழைத்துச் சென்றார். அவர்களுடன் 7 நாய்கள் துணைக்கு வந்தன. நடு மலையில் ஒரு சிறிய கோவில் உள்ளது. அங்குதான் **டாக்டர்** அமர்ந்திருந்தார் என்றும், அவர்களுக்குப் பழங்களைப் பறித்து சாப்பிடக் கொடுத்ததாகவும் சொன்னார். மலை மீதிலிருந்து வெளிப்படும் தண்ணீர்தான் நீர் வீழ்ச்சியாகக் கீழே இறங்குகிறது. அங்கெல்லாம் தேடிவிட்டுக் கீழிறங்கினர்.

**1996 - அக்டோபர் -: பட்டினத்தார் கோவில்:**

அக்டோபர்மாத ஆரம்பத்தில், அம்மாவுடன், ஒரு பெரிய சீடர் கூட்டம், ஹரித்வார், ரிஷிகேஷ் பயணம் மேற்கொண்டது. அக்டோபர் 6ம்தேதி, ரிஷிகேஷ் சிவானந்தா ஆஸ்ரமத்தில், திருவள்ளுவருடைய அருட்குறள் (வீடு பேற்றினைப் பற்றிப் பாடப்பட்ட, இதுவரை வெளிவராத, மூவாயிரம் குறள்) புத்தக வடிவில் வெளியிடப்பட்டது. அதன்பிறகு, டெல்லியில் ஊடகர் மூலம் அன்னை, **டாக்டரை** சீடர்கள் வரும் 21ம் தேதி பட்டினத்தார் கோவிலில் சந்திக்கலாம் என்ற தேனினும் இனிக்கும் நற்சொற்களால் மகிழ்ச்சிக்குள்ளாக்கினார். கவனத்துடன் இவ்வரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளுமாறும் எச்சரித்தார். 21ம் தேதியும் வந்தது. சீடர்கள் அனைவரும் பட்டினத்தார் சந்நிதியில் கூடித் தியானித்தனர். ஆர்வமுடன் **டாக்டரின்** வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். எப்படி வருவார், எவ்வாறு வருவார் என்ற ஆர்வத்துடன் தவித்திருந்தனர். அவர் physical ஆக வருவார் என்ற நம்பிக்கை எல்லோரிடத்திலும் மிகுந்திருந்தது. அச்சமயம், திடீரென, ஒரு சீடர், மீடியமாகி, அம்மாவை அழைக்க, ஹரி என்ற சீடர், 'டாக்டர் வந்திருக்கிறார்' எனக்கூற, அவரை நேரில் பௌதிக வடிவில் காணப்போகிறோம் என்ற ஆர்வத்துடன் எதிர்பார்த்திருந்த சீடர்கள் சிலர், "இல்லை, இல்லை, டாக்டர் எங்களுக்கு மீடியத்தில் வேண்டாம், நேரில் தான் வரவேண்டும்" என, ஏமாற்றத்தில் கூச்சலிட்டனர். இந்நேரத்தில் ஒரு குழப்பம் நேரிட்டது. அதன் விளைவாக, அன்று, ஒன்றுமே நடைபெறவில்லை. அந்த சீடர்கள் சிறிது பொறுமை காத்து, மீடியம் வாயிலாக **டாக்டர்** என்ன கூற வருகிறார் என்று பொறுமையுடன் கேட்டிருந்தால், எதிர்பார்த்தது நிறைவேறியிருக்கலாம். அவசரத்தால் அக்காரியம் கெட்டது என்று தான் கூற வேண்டும். அன்னையும், கவனமாக நடந்து கொள்ளுமாறு முன்கூட்டியே எச்சரித்திருந்தும், தவறு நேர்ந்து விட்டது. வரவிருந்த தங்கள் குருவை, அவசரத்தாலும், கவனக்குறைவாலும் தடுத்து விட்டனரோ, என்னவோ?

**1996 - நவம்பர் -: கன்யாகுமரி - அகஸ்தீஸ்வரம் - திருவனந்தபுரம்:**

சாந்தம்மாவுக்கு அகக்காட்சியாக, **டாக்டர்** ஒரு கடற்கரையில்,

கருங்கற்களுக்கிடையில் அமர்ந்திருப்பதுபோல் வந்தது. மேலும் அவருக்கு அடிக்கடி கனவிலும், காட்சியாகவும் பெரிய ஆஞ்சனேயர் தோன்றினார். ஆகவே, அம்மா, சாந்தம்மா, இஞ்சினீயர், ஸ்ரீனிவாசன் (Bank), ஜானி ஆகியோர் கன்யாகுமரிக்கும், சுசீந்திரம் கோவிலுக்கும் சென்று விசாரித்தனர். அகஸ்தீஸ்வரத்தில் அம்மா நிற்கவே முடியாத அளவுக்கு தியானத்துக்குள் இழுக்கப்பட்டார். அங்கிருந்து தென்காசி, திருவனந்தபுரம் சென்றனர். அங்கெல்லாம் **டாக்டர்** இருப்பதுபோல் ஒரு உணர்வு அவர்களில் சிலருக்கு ஏற்பட்டது.

**1996 - தென்காசி:**

திருமதி லோகேஸ்வரி தென்காசிக்குச் சென்றபோது, அம்மா அவரிடம் அங்குள்ள குழந்தையானந்தர் சமாதியில் **டாக்டரின்** ஃபோட்டோவைக் காட்டி அவரை அங்கிருந்தவர்கள் யாராவது பார்த்திருக்கிறார்களா எனக் கேட்கச் சொன்னார். லோகேஸ்வரி அங்குள்ள குழந்தையானந்தர் சமாதிக்குச் சென்று, அந்தச் சமாதியைப் பராமரித்து வரும் குடும்பத்தைச் சார்ந்த ஒரு சிறுமியிடம் **டாக்டரது** ஃபோட்டோவைக் காண்பித்து, அப்பெண் அவரைப் பார்த்திருக்கிறாளா என்று கேட்க, மூன்று, நான்கு மாதங்களுக்கு முன்னர் அவர் அங்கு வந்திருந்ததாகவும் சற்று நேரம் தியானம் செய்து விட்டுச் செல்வதாகக் கூறி, அமர்ந்து தியானம் செய்து கொண்டிருந்தார், பிறகு அவரைக் காணவில்லை என்றும் கூறினாள்.

**பாபநாசம் - திருப்பதி:**

ஒரு கனவின் அடிப்படையில், திருப்பதி அருகிலுள்ள பாபவினாசம் நீர் வீழ்ச்சிக்கு, அம்மா, சாந்தம்மா, இஞ்சினீயர், பாலாஜி, ஸ்ரீனிவாசன் (பேங்க்), கேசவன், ஜானி ஆகியோர் சென்று பார்த்தனர். அங்கு எந்த செய்தியும் கிடைக்கவில்லை.

**1996 - நவம்பர் - சென்னை :**

இச்சமயம், சாந்திக்கு வந்த கனவில், **டாக்டர்** எண் 18, டானாத் தெருவில்

இருப்பதாக வந்தது. ஆகவே, அம்மாவுடன் சாந்தம்மாவும் சாந்தியும் அங்கே சென்று அத்தெருவிலுள்ள ஒரு டீக்கடையில் **டாக்டரின்** ஃபோட்டோவைக் காட்டி விசாரிக்க, அக்கடைக்காரர், அவர் தினமும் ஒரு பையனுடன் காலை 9 மணியளவில் வந்து டிஃபன் வாங்கிச் செல்வதாகவும், அவர்கள் சென்ற நேரம் அதுவாதலால் அவர்களைக் காத்திருக்குமாறு சொன்னார். ஒரு வாரம் இதுபோல் சென்றும் அவரைக் காணமுடியவில்லை. அம்மாவின் சொற்படி, ஜானியும் அதன் பிறகு ஒருசில நாட்கள் அந்நேரத்தில் சென்று பார்த்தார். ஒருநாள் அவ்வாறு அவர் காத்திருக்கையில், அங்கே இருந்த நால்வரில் ஒரு ஆள் மற்றவர்களிடம், "நித்தி இருக்கானே, வருவேன்னு சொல்வான். ஆனால் சொன்ன டயத்துக்கு வராமல் இப்படித்தான் காக்க வச்சுடுவான்" என்று சொன்னார். ஜானிக்கு, இது தனக்கு சொல்லப்பட்டதுபோல் தோன்ற, துணுக்குற்றார். **டாக்டர்** இப்படித்தான் ஒரு தகவல் தந்து விட்டு, சீடர்கள் போய்ப் பார்க்கும் தினத்திலிருந்து அங்கே வருவதை நிறுத்தி விடுவார். பல இடங்களில் இவ்வாறே நேர்ந்திருக்கிறது. **டாக்டர்**, தொடர்ந்து இவ்வாறு செய்தி தந்து அங்கெல்லாம் செல்லவைப்பதன் நோக்கம், அவர், தான் எப்போதும் அவர்களுடன் இருப்பதனையும், அவர்களுடன் விடாது தொடர்பு கொள்வதற்காகவும்தான் என்று தோன்றுகிறது. இச்சமயம், அத்தெருவிலுள்ள ஸ்கூலில் டீச்சர்ஆக வேலை பார்க்கும் ஒருவரிடம் விசாரிக்கையில், தான் அங்கு அவரைப் பார்த்திருப்பதாக உறுதி செய்தார்.

### 1996 - டிசம்பர் -: கன்யாகுமரி - முட்டம்:

ஒருநாள் சாந்தம்மாவுக்கு, தியானம் செய்கையில் அகக்காட்சியாக, **டாக்டர்** கடற்கரையோரமாக, கடலை நோக்கி அமைந்திருந்த, ஒற்றை அறையுடன் காணப்பட்ட ஒரு வீட்டில் இருப்பதாக வந்தது. அந்த வீட்டில் பத்து அல்லது பதினைந்து பேர்கள், தலையில் வெள்ளைத் துணி போட்டுகொண்டு அமர்ந்திருக்க, **டாக்டர்** தானும் அதுபோல் தலையில் வெள்ளைத்துணி அணிந்து அவர்களுடன் உரையாடுவதுபோல் தோன்றியது. கடல் அலைகளின்றி அமைதியாகத் தோற்றமளித்தது. அவ்விடம் கருங்குளம் என்று குரல் வடிவில் வந்தது. முட்டத்தில், ஒரு மீன்பிடிப் படகில் கடலுள்

பயணித்து அதுபோல் கடலோரமாக ஏதேனும் இடம் உள்ளதா என்று தேடினர். அதன் பிறகு கடலை ஒட்டி அமைந்த மேல் மண்ணூர் என்ற கிராமத்தில் ஒரு சர்ச்சில் விசாரிக்கையில், அங்கு ஒருவர், **டாக்டர்** போல் தோற்றமளிக்கும் ஒருநபர் குறி சொல்வதாகவும், அவர் அங்குதான் உள்ளார் என்றும் சொன்னார். ஆகவே, ஊருக்குள் சென்று விசாரிக்கையில் அவர் இரண்டு நாட்களுக்கு முன்னர் தான் வீட்டைக் காலி செய்துகொண்டு எங்கோ சென்றுவிட்டார் என்றனர்.

### 1997 - ஜனவரி 31 - சென்னை:

இத்தினத்தன்று, அம்மாவின் உறவினர் (திரு ரவியின் சகோதரி), திருமதி நந்தினி மதியம் 1.45 மணிக்குப் புரசைவாக்கம் வெள்ளாளர் தெரு முனையிலிருக்கும் சரவண பவன் ஹோட்டலிலிருந்து சாப்பிட்டு விட்டு வெளியே வருகையில், எதேச்சையாக எதிர்ப்புறம் நோக்குகையில் **டாக்டர்** நின்றிருக்கக் கண்டார். அவர் **டாக்டரை** நேரில் பார்த்திருந்தாலும் அவரது சீடரில்லை. இறந்துபோன ஒருவர் எப்படி எதிரில் உயிரோட்டமாகக் காணப்படக்கூடும் என்று அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்தாலும், சுதாரித்துக்கொண்டு, உடனே சாலையைக் கடந்து எதிர்ப்புறம் சென்று **டாக்டரைக்** காண எத்தனிக்கையில், அதற்குள் **டாக்டர்** எங்கோ மறைந்துவிட்டார். இதுபற்றி அவர் அம்மாவுக்கும் ஃபோனில் தெரிவித்தார். ஆகவே அம்மா, சாந்தம்மா, ஜானி மற்றும் கேசவனும் காலையிலும், மதியத்திலுமாக சில தினங்கள் அங்கே முகாமிட்டு அவரைச் சந்திக்க முற்பட்டனர். ஆனால் அவர்களால் **டாக்டரைக்** காண இயலவில்லை.

### 1997 - பிப்ரவரி -: திருநெல்வேலி:

அம்மாவிற்கு செண்பகராமன் கோவில் தெரு என்று கனவில் வந்தது. உள்ளூரிலும், திருநெல்வேலி போன்ற வெளியூர்களிலும் விசாரிக்கையில் ஒன்றும் கிட்டவில்லை.

**1997-மார்ச் 9 : சென்னை-புரசைவாக்கம் :**

திருமதி நந்தினி, மறுமுறை **டாக்டரை** புரசைவாக்கம், செங்கற்சூளை சாலையில், கல்லரை எதிரில், ஷண்முகராயன் தெரு முனையிலுள்ள ஒரு சர்ச் வாசலில் பார்த்தார். ஆனால், காரை விட்டு இறங்குவதற்குள் **டாக்டர்** பார்வையிலிருந்து மறைந்து விட்டார். இவ்விடங்களிலும் தேடுதல் தொடர்ந்தது. பெரம்பூரில், பெரம்பூர் பேரக்ஸ் சாலையிலுள்ள ஒரு ஆசிரமத்தில் உள்ள சன்யாசியிடம் **டாக்டர்** ஃபோட்டோவைக் காட்ட, அவர், **டாக்டர்** இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன் அங்கு வந்து தங்கினார் என்றார். அங்கே புவனேஸ்வரி தியேட்டருக்கு எதிரில் உள்ள கடையில் வேலை பார்க்கும் ஒரு பத்து வயதுச் சிறுவன் நாய்க்கடிக்கு வைத்தியம் பார்க்க வேண்டி ஒரு கிளினிக்குச் சென்ற போது, ஃபோட்டோவில் சீடர்கள் காணபித்த **டாக்டர்தான்** அவனை அரசாங்க மருத்துவ மனைக்குச் செல்லும்படி கூறியதாக உறுதியாகக் கூறுகிறான். ஆனால் அவன் குறிப்பிட்ட க்ளினிக்கில் சென்று பார்த்தபோது, அங்கு வேறொரு **டாக்டர்** இருக்கிறார். **டாக்டரின்** விளையாட்டை என்னவென்று சொல்வது!

**1997, ஏப்ரல் – மே - திருபுவனம்:**

பாலாஜிக்கு வந்த கனவில், **டாக்டர்** திருபுவனத்தில் இருப்பதாக வந்தது. அதன் அடிப்படையில் கேசவனும், ஜானியும் கும்பகோணம் அருகிலுள்ள திருபுவனத்திற்குச் சென்றார்கள். ஜானி ஏற்கனவே பல வருடங்கள் அவ்வூரில் வசித்திருந்தபடியால் அவருக்கு கோவில் குருக்கள், மற்றும் சிலரைத் தெரிந்திருந்தது. அங்கு பலரிடம் **டாக்டரின்** ஃபோட்டோவைக் காட்டிக் கேட்டதில், இருவர் மட்டும் அவரைப் பார்த்ததாக உறுதி செய்தனர். சந்நிதித் தெருவில் கடை வைத்திருக்கும் ஒரு டெய்லரிடம் விசாரித்ததற்கு, முதல் ஞாயிறு மாலை அவர் கடையைத் தாண்டி, கோவிலை நோக்கிச் சென்று கொண்டிருந்ததைக் காண நேரிட்டதாகக் கூறினார். சாதாரண உடையில் அவர் காணப்பட்டதாகவும் சொன்னார். உள்ளே கோவிலில் உள்ள குருக்களிடம் ஃபோட்டோவைக்காட்ட, அவர், (ஜானிக்கு மிகவும் அறிமுகமானவர்) தான் அவரைக் கோவிலுள் (டெய்லர் கூறிய அதே ஞாயிறு

மாலை) நுழைவதைத் தன் வீட்டிலிருந்து பார்த்ததாகக் கூறினார். அன்று அவருக்கு டூட்டி இல்லாததால் வெளியே நின்றிருக்கையில் கண்டதாகத் தெரிவித்தார். (ஒவ்வொரு ஞாயிறும் அக்கோவிலிலுள்ள சரபேஸ்வரருக்கு பூஜை, அர்ச்சனை செய்வது விசேஷம். ஆகவே, அந்நாட்களில் நிறையப் பேர் வருவர்). இருவர் கூறியதும் முற்றிலும் ஒத்திருந்தது.

**பச்மடி (மத்யப்ரதேஷ்):**

ஒரு கனவின் அடிப்படையில், கேசவனும், ஜானியும் வட இந்தியப் பயணம் மேற்கொண்டனர். நாக்பூர் - போபாலிலிருந்து சுமர் 250 கிலோமீட்டர் சம தொலைவிலிருந்த பச்மடி என்ற ஸ்தலத்துக்குச் சென்றனர். அவ்விடம், மகாபாரதத்துடன் தொடர்புள்ளது. பஞ்ச பாண்டவர்கள் வனவாசத்தின்போது மறைவாகத் தங்கியிருந்த ஒரு குகைவீட்டில் சென்று தியானம் செய்தனர். சிவபுராணத்தின் சில நிகழ்வுகளும் அங்கே நடைபெற்றுள்ளன. ஆனால், செய்தி ஏதும் கிட்டவில்லை. ஏதோ காரணம் கருதி **டாக்டர்** அனுப்பியிருக்கக்கூடும். ஏனெனில் அத்தகைய விசேஷமான இடம் அது. அச்சமயம், போபால் ஸ்டேஷனில் ரயிலில் அமர்ந்திருக்கையில் சற்றே தொலைவில் **டாக்டர்** போன்ற ஒருவர் செல்லக் கண்டனர். ஆனால் இறங்கிப் பார்க்க முடியாதிருந்தது.

**1997-ஏப்ரல் – சூரியனார் கோவில் - திருமங்கலக்குடி:**

சாந்தம்மாவின் மகன் பாலாஜிக்கு (அவர் சீடரல்லாதவர்) டாக்டர் திருபுவனம் (கும்பகோணம் அருகில்) என்ற ஊரில் இருப்பதாகக் கனவு வந்தது. அவ்வூரிலுள்ள ஒரு கோவில் கோபுரத்தையும் காட்டி, அவ்வூருக்குக் குறிப்பிட்ட நாளில் காலை 10.30க்கு வந்தால் **டாக்டரைக்** காணலாம் என்று தெரிவிக்கப்பட்டது. அக்கோவில் கோபுரம் வர்ணம் அடிக்கப்படாததாய் இருந்தது. கோவில் கோபுரத்தின் அமைப்பும் ஒரு கோணத்திலிலிருந்து காட்டப்பட்டது. ஆனால் எக்கோவில் என்று சொல்லப்படவில்லை. ஆகவே, அவ்வூரைத் தேடிச்சென்று **டாக்டரைக்** காணத் திட்டமிடப்பட்டு, அம்மாவுடன், சாந்தம்மா, ஜானி, கேசவன் ஆகியோர் பாலாஜியுடன் அவரது காரில்

திருபுவனம் சென்றனர். அவ்வூரில் காணப்பட்ட கோவில் கனவில் பாலாஜி பார்த்திருந்ததுடன் ஒத்திருக்காததால், கும்பகோணம், வேப்பத்தூர், திருமங்கலக்குடி, சூரியனார் கோவில் வழியே ஒரு சுற்று சுற்றிப் பார்த்ததில் அதுபோல் எந்த ஒரு கோவிலும் காணப்படவில்லை. ஏனெனில், தமிழ்நாட்டிலுள்ள கிட்டத்தட்ட எல்லாக் கோவில் கோபுரங்களுக்கும் அச்சமயத்தில் தான் வர்ணம் பூசப்பட்டிருந்தது.

மறுபடியும் அதே வழியிலேயே திரும்பிச் செல்லுகையில், பாலாஜிக்கு, ஒரு வர்ணம் பூசப்படாத கோவில் கண்ணுக்குப்பட, அவர் அக்கோவிலுக்கு விரைந்தார். அவர்கள் முதல் சுற்றில் அது வழியாகச் சென்றிருந்தும் ஏனோ அக்கோவிலைக் காணத் தவறிவிட்டனர். பிராணநாதர் கோவில் என்ற சிவாலயம் அது. கனவில் குறிப்பிட்ட நேரமோ நெருங்கி விட்டது. பாலாஜி காரை விட்டு இறங்கி அக்கோவிலைக்கண்டு, தான் கனவில் கண்டது போல் இக்கோவில் அமைப்பு இல்லை எனச் சொல்ல, கூடச் சென்றவர்கள் திகைத்தனர். பாலாஜி சுற்றிச் சுற்றி வந்து கடைசியில் முன்புறம், பக்கவாட்டிலுள்ள குளத்தில் இறங்கி கோபுரத்தை நோக்க, தான் கனவில் கண்டபடி கோபுரம் அமைந்திருக்கண்டு மகிழ்ச்சியுடன் “ஆம்! இக்கோவில்தான்!” என்று கூற அனைவரும் நிம்மதியுற்றனர். உடனே கோவிலுள் சென்று, அங்கு அர்ச்சனை டிக்கட் கொடுப்பவரிடமும், அர்ச்சகரிடமும் **டாக்டரின்** ஃபோட்டோவைக் காட்டிக் கேட்க, அவர்கள் அனைவரும், அவர் அன்று காலையில் அங்கு வந்திருந்ததாயும், குளத்தில் குளிக்க பக்கெட் கேட்டு வாங்கிக் குளித்து விட்டு சற்று நேரம் முன்புதான் புறப்பட்டுச் சென்றதாகவும் கூற, ஒரு புறம் மகிழ்ச்சியுற்றாலும், அவர் அங்கில்லாததால், இப்படிக் கை நழுவ விட்டோமே என்று வருத்தமுற்றனர். இச்சமயம், ஒரு பெண்மணி வரவும், அவரிடம் புகைப்படத்தைக் காட்டிக் கேட்க, அவரோ, தான் இப்பொழுது சூரியனார் கோவிலிலிருந்து வருவதாகவும், புகைப்படத்திலிருக்கும் இவர் அக்கோவில் வாசலில் நின்று கொண்டிருப்பதாகவும், உடனே சென்றால் காணக்கூடும் என்றும் சொன்னார். இதைக் கேட்ட அவர்கள் மீண்டும் மகிழ்ச்சியடைந்தனர். அக்கோவில் அருகிலுள்ளதால் உடனேயே அங்கு சென்றடைந்தனர். ஆனால், அங்கு

**டாக்டரைக்** காணவில்லை. அங்கிருந்தவர்களிடமும், கோவில் ஊழியர்களிடமும் **டாக்டரின்** புகைப்படத்தைக் காட்டிக் கேட்கையில், சிறிது நேரம் முன்பு வரை அவர் அங்கேயே காணப்பட்டதாகவும், இப்பொழுதுதான் அவர் எங்கேனும் சென்றிருக்கக் கூடும் என்றும் கூறினர். அப்பொழுது மணி 10.45 போல் இருக்கும். அவர் கொடுத்திருந்த நேரம் தப்பியதால் அவர் சென்று விட்டார். கைக்கெட்டியது வாய்க்கெட்டாது போயிற்று. அவர்களது வருத்தமும் ஏமாற்றமும் சொல்லிலடங்காது.

**1997- ஜூன்-9 : கிருஷ்ணராஜபுரம் - அந்தர்கங்கா :**

கூடுமலை ஆஸ்ரமம் தொடக்க நிகழ்ச்சிக்குப் பின்னர், அம்மாவுடன், சாந்தம்மா, எஞ்சினீயர், ரமேஷ், கேசவன், நிர்மலா, ஜானி ஆகியோர் பங்காரப்பேட்டை ஸ்டேஷனுக்குச் சென்றனர். அங்குள்ள ரெயில்வே துப்புரவாளரிடம் **டாக்டரின்** புகைப்படத்தைக் காட்டிக் கேட்க, அவர் **டாக்டரை** 10 அல்லது 15 நாட்களுக்கு முன் அங்கு பார்த்ததாகவும், அவரிடம் தான் அந்தர்கங்கா செல்லுவதாகக் கூறி, 'நீயும் வருகிறாயா?' எனக் கேட்டதாயும் சொன்னார். மாரிக்குப்பம் ரெயில் நிலையத்தில் சிவகுமார் என்ற ஒருவரிடம் விசாரிக்கையில், அவர், **டாக்டரை** கிருஷ்ணராஜபுரத்தில் பார்த்திருப்பதாயும், தான் தினந்தோறும் அங்கிருந்துதான் டூட்டிக்கு மாரிக்குப்பம் வருவதாயும் கூறினார். அவரையும் அவர்கள் கிருஷ்ணராஜபுரத்திற்கு அழைத்துக்கொண்டுவந்து அங்கே தேடினர். **டாக்டர்** எதிர்ப்புறமுள்ள பிளாட்பாரத்திலுள்ள ஒரு பெஞ்சில் அமர்ந்திருக்கக் கண்டு, ஜானியும், கேசவனும், ரமேஷும் அங்கு விரைந்தனர். அவர்கள் சென்றடைவதற்குள் அவர் எப்படியோ அங்கிருந்து சென்றுவிட்டார். அருகிலுள்ள குடியிருப்புகளில் விசாரித்தார்கள். பலரும் பார்த்திருந்ததாகக் கூறினர். ஸ்டேஷன் அருகிலேயே இரண்டு நாட்கள் முகாமிட்டுத் தேடுதலில் ஈடுபட்டனர்.

அச்சமயம் அவர்கள் அம்மாவுடன், 2-3 நாடகள் தொடர்ந்து அங்கே முகாமிட்டிருந்து, தினமும் கே.ஆர்.புரம் ஸ்டேஷனுள் தவறாது பலமுறை சுற்றி வந்தனர். ஒரு நாள் மதியம் பிளாட்ஃபாரத்தில் அம்மா, சாந்தம்மா, ஜானி,

ரமேஷ் நால்வரும் நுழைகையில், **டாக்டரைப்** போலவே தோற்றமளித்த ஒருவர் அவர்களுக்கு முன்னால் செல்ல, நால்வரும் அவரைப் பின்தொடரவும், அதைக் கண்ட அவர் சற்று முன்னால் சென்று, அங்கு நின்றுகொண்டிருந்த ரெயில் என்ஜின் மீதேறி ஏதோ செய்வது போல் பாவனை செய்துகொண்டே இவர்களைத் திரும்பிப்பார்த்தார். இவர்களோ நகராது அங்கேயே நின்று அவரையே பார்த்துக் கொண்டிருக்க, அவர் கீழிறங்கி மேலும் நடந்து பிளாட்ஃபாரத்திலிலிருந்து வெளியே செல்லவும், மேடம், சாந்தம்மாவை அங்கேயே இருக்க விட்டு ஜானியும், ரமேஷும் அவரைப் பின்தொடர்ந்தனர். சிறிது தூரத்துக்கொரு முறை அவர் தரையிலிருந்து ஏதோ எடுக்க முற்படுவதுபோல் குனிந்து அவர்களை நோக்கி, பின் மேலும் நடக்கலானார். இருவரும் இவ்வாறு கிட்டத்தட்ட 2 கிலோமீட்டர் போல் தொடர்கையில், முயற்சியில் களைப்புற்று, இருவரும் திரும்பினர். பின்னர் நினைத்துப் பார்க்கையில், வேகமாகக் கடந்து அவரை அடைந்து அவரிடமே அவர் **டாக்டர்** தானா எனக் கேட்டிருக்கலாமே, தவறி விட்டோமே என வருத்தம்தான் ஏற்பட்டது. (**டாக்டர்**, பல நேரங்களில் இது போல் மூளையை ஸ்தம்பிக்கச் செய்தும், தயக்கம், பயம் போன்றவற்றை உண்டாக்கியும், சிறிது தொலைவில் காண்கையில் அச்சாகவும், அருகில் நெருங்குகையில் முகத்தோற்றத்தில் மாற்றம் செய்தும் கிட்ட நெருங்க விடாது செய்து விடுகிறாரே!).

இதையடுத்து, சில நாட்களுக்குப் பிறகு, கேசவன் மட்டும் கிருஷ்ணராஜபுரம் சென்றார். அங்கு பலபேர் **டாக்டரைப்** பார்த்திருந்ததாகச் சொல்லியிருந்ததால், அவருக்கு அங்கே சென்று விசாரிக்க வேண்டும் என்று தோன்றியது. ஸ்டேஷனில் அவர் **டாக்டரைத்** தேடிச்சென்ற சமயம், இருப்புப் பாதை ஓரமாக ஒருவர் அவர் பக்கம் வந்து கொண்டிருந்தார். அவர் வெள்ளை வேட்டியும், வெள்ளை சட்டையும் அணிந்திருந்தார். கருப்பாகவும், ஒல்லியாகவும், உயரமாகவும் காணப்பட்டார். ஒட்டு மொத்தத்தில் பார்க்கையில் அவர் **டாக்டர்** போன்று தோன்றினாலும், தனித்தனியாகப் பார்க்கையில் சிறிது வித்தியாசம் புலப்பட்டது. கேசவன் அவர் அருகில் சென்று பேச்சுக் கொடுத்தார். அவரும் சகஜமாகப் பேசிக்கொண்டிருந்தார்.

தான் திருச்சியைச் சேர்ந்தவர் என்றும், பெங்களூரில் டெலிஃபோன் உற்பத்திச் சாலையில் வேலை பார்ப்பதாயும் சொன்னார். பேச்சின் போக்கில், தான் ஒரு கிருத்துவர் என்றும், ஜீசஸ் வரும் நேரம் நெருங்கி விட்டது எனவும், இஸ்ரேலில், குறிப்பிட்ட ஒருவர் பிரதமராகும் போது அவர் வந்துவிடுவார் எனவும், தற்சமயம் நேரம் சரியில்லை எனவும் கூறினார். அவர் பேசுகையில் கேசவன் அவரை உன்னிப்பாக ஆராய்ந்து கொண்டிருந்தார். வெளித்தோற்றத்தில் வித்தியாசம் புலப்பட்டாலும், அவரது உள்மனதுக்கு வந்தவர் **டாக்டராக** இருக்கலாம் என்று உறுதிபடத் தோன்றியது. இடையில் தாயுமானவர் பாடல் ஒன்றையும் குறிப்பிட்டு விளக்கமும் தந்தார். அவர் சென்ற பிறகு, கேசவன், தான் அவரைத் தவற விட்டுவிட்டோமே என்று பலவாறும் எண்ணி வருத்தமுற்றார்.

### 1997- ஜூன் - ஆயக்குடி:

மறுபடியும் பாலாஜிக்கு ஒரு கனவில், **டாக்டரும்**, பாலாஜியும் ஒரு அம்பாசிடர் காரிலிருந்து இறங்கி ஒரு வீட்டுக்குள் செல்கின்றனர். அந்த வீட்டின் கதவுகள், எடுத்து வைக்கும் பலகைகள் போல் இருந்தது. செம்மண் சாலை. ‘அம்மா’ என்றொரு போஸ்டர், ‘ஆங்கிலத்திலும், தமிழிலுமாய் ஆயக்குடி’ என்ற பெயர்ப் பலகை, அந்த வீட்டின் வெளியே ஒரு வேலை செய்யும் பெண்ணிருக்க, **டாக்டர்** உள்ளே சென்று ஒரு டேபிளின் முன்னாலுள்ள ஈஸிச்சேரில் அமர்ந்திருக்கிறார். எதிர்ப்புறத்தில் நிறைய பழையகால மர நாற்காலிகள் காணப்பட்டன. இதைக் கொண்டு, அம்மா, சாந்தம்மா, பாலாஜி, பத்ரி, ஜானி, கேசவன் ஆகியோர் அங்கு சென்று புதுக்கோட்டைக்கருகிலுள்ள ஆயக்குடி சென்று தேடினர். அருகிலுள்ள பரமக்குடி, மதுரை, திருச்சி மற்றும் பல ஊர்களுக்கும் சென்று விசாரித்தனர்.

### 1997 - ஜூலை: சென்னை:

பாலாஜி, **டாக்டரை**, அடையார் டிப்போ – பெசன்ட் நகர், திருவான்மியூர் வழியில் புல்லட் வண்டியில் பயணிப்பதை அடிக்கடிப் பார்த்திருக்கிறார். ஆகவே, பெசன்ட்நகர் வேளாங்கண்ணி சர்ச் அருகிலுள்ள டீக்கடையில்

**டாக்டரது** ஃபோட்டோவைக் காட்டிக் கேட்கையில், கடைக்காரர், "அவர் இங்குதான் எங்கோ இருக்கிறார், தினமும் டீக் குடிக்க அவர் கடைக்கு வருகிறார்" என்று கூறி, ஆனால் அவர் எங்கு தங்கியிருக்கிறார் எனத் தெரியாது என்றார். அவரிடம் ஃபோன் நம்பரைத் தந்து, அவர் வந்தால் தெரிவிக்குமாறு வேண்டினர். அவரிடமிருந்து, இரவு 10 மணிக்குப் ஃபோன் வந்தது, அந்த நபர் அஷ்டலக்ஷ்மி கோவிலுக்கு அருகில் படுத்திருக்கிறார் என்றறிந்து. அன்றிரவு 12 மணி வாக்கில், அம்மா, சாந்தம்மா, எஞ்சினீயர், பாலாஜி நால்வரும் அங்கு சென்றனர். அச்சமயம் நிறைய நாய்கள் படுத்திருந்தன. ஆனால் அதிசயமாக ஒரு நாய்கூட எழுந்திருக்கவுமில்லை, குரைக்கவுமில்லை. அவர் கோவிலுக்குப் பின்புறம் ஒரு மரப் பலகையில் படுத்திருந்தார். அவரது உயரம், கால் விரல்கள் எல்லாம் முற்றிலும் **டாக்டரை** ஒத்திருந்தன. முகம் வேறாகத் தெரிந்தது. ஏமாற்றமும், வருத்தமும் அவர்களைத் தாக்கியது.

### 1997 - ஜூலை : அந்தர்கங்கா - ராபர்ட்சன்பேட் :

அம்மா, சாந்தம்மா, ஜானி, கேசவன், பாலாஜி ஆகியோர் மீண்டும் அந்தர்கங்கா சென்று விசாரித்தனர். அங்கிருந்த பூஜாரப்பா என்பவர், **டாக்டரை** ராபர்ட்சன்பேட்டில் பார்த்ததாகக் கூறினார். அங்கே சென்று ஒரு கோவிலில் விசாரித்ததில் அங்குள்ள குடியிருப்பின் அருகில் பார்த்ததாகச் சொன்னார்கள். அங்கு சென்று பார்த்தார்கள்., ஆனால் காண முடியவில்லை. இச்சமயம் பங்காரப்பேட்டையில் கடைத் தெருவில் ஜானியும், சாந்தம்மாவும் சென்று விசாரிக்கையில், ஒரு பாத்திரக்கடை வியாபாரி, **டாக்டரின்** புகைப்படத்தைக் கண்டவுடன், பதிலேதும் சொல்லமுடியாத ஒரு பரவச நிலையை (Ecstasy) எட்டினார். அவர் ஓரிரு நிமிடங்கள் ஸ்தம்பித்துப் போய், வாயடைத்து அமர்ந்திருந்தார். பதில் சொல்ல நினைக்கிறார், ஆனால் வாய் திறக்கமுடியவில்லை. பின் சற்று நிதானித்து, சன்னமான குரலில் சிறிது நேரம் சென்று வருமாறு வேண்டினார். **டாக்டர்** அவருக்கு அச்சமயம் என்ன காட்டினாரோ, அவர் அந்நிலையை எட்ட!

**1997 - ஆகஸ்ட் : அந்தர் கங்கா - மாலூர் :**

சாந்தம்மா, வித்யா, கேசவன், ஜானி ஆகியோர் அம்மாவுடன் அந்தர்கங்கா சென்றனர். **டாக்டர்** போட்டோவைப் பார்த்துவிட்டு அவரை மாலூரில் பார்த்திருந்ததாக ஒருவர் கூறினார். அம்மாவையும், வித்யாவையும் விட்டுவிட்டு, சாந்தம்மாவும், ஜானி, கேசவனும் மாலூர் சென்றனர். அங்கு கோவிலிலும், கடைகளிலும் ஃபோட்டோவைக் காட்டிக் கேட்டதில், சிலர் அவரை அங்கே பார்த்திருப்பதாகச் சொன்னார்கள். பின்னர் அந்தர்கங்காவுக்குத் திரும்பினர். அங்கு ஒரு சிறிய குகையுண்டு. தான் அடிக்கடி அக்குகையில் அமர்ந்து தியானம் செய்திருப்பதாக **டாக்டர்** கூறியிருக்கிறார். ஆகவே, அங்கு சென்றமர்ந்து தியானம் செய்தார்கள். அதற்கருகிலேயே அமைந்துள்ள ஒரு சிறிய ஆசிரமத்தில் இரு சன்யாசிகள் இருக்கக் கண்டு. அவர்களிடம் ஃபோட்டோவைக் காட்ட, அவர்கள், அவர் மூன்று மாதங்களுக்கு முன்னர் அங்கு வந்திருந்ததாயும், தாங்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக்கு அவர் தியானம் பயிற்று வித்ததாயும் சொன்னார்கள்.

**1997 - அக்டோபர்: அந்தர்கங்கா:**

**டாக்டரைப்** பற்றி விசாரிக்க, அம்மாவுடன், சாந்தம்மாவும், அனந்துவும், டிரைவர் முருகனுடன், அந்தர்கங்கா மலை மேலுள்ள ஏழு கிராமங்களுக்கும் சென்றனர்.அங்கு ஒரு சிலர் பார்த்திருந்ததாகச் சொன்னார்கள்.

**1997 - நவம்பர்: கோகர்ணம்:**

சாந்தம்மாவின் மகன் பாலாஜியின் கனவில் **டாக்டர்** கோகர்ணம் எனக்கூறியதால், அவரும், அனந்துவும் கோகர்ணம் சென்று பார்த்தனர். ஜானியும், புதுக்கோட்டையிலுள்ள திருக்கோகர்ணம் கோவிலுக்குச் சென்று விசாரித்தார். ஒன்றும் தெரியவில்லை.

**1998 - ஜனவரி: மதுரை:**

சாந்தம்மா மதுரைக்குச் சென்றிருந்தபோது, அங்கு அரசரடியிலுள்ள

குழந்தையானந்த ஸ்வாமிகள் ஆஸ்ரமத்துக்கு தியானம் செய்யச் சென்றார். **டாக்டர்** இங்கு வந்து அடிப்பிரதட்சணம் செய்திருந்தாக ஒருமுறை கூறியிருக்கிறார். ஆகவே சாந்தம்மா அங்குள்ள, ஆஸ்ரமத்தின் பொறுப்பிலிருந்தவரது மனைவியிடம் **டாக்டரின்** ஃபோட்டோவைக் காட்டிக் கேட்டதில், அவர், ஃபோட்டோவில் உள்ளவர் 3 மாதங்களுக்கு முன்பு ஆசிரமத்திற்கு வந்திருந்ததாகவும், அப்போது தனக்கு உடல்நிலை சரியில்லை எனச் சொல்லவும், அவர் மருந்துச் சீட்டு எழுதிக்கொடுத்து, அம்மருந்தை அவர் உட்கொண்டவுடன் உடம்பு சரியாகிவிட்டதாயும் சொன்னார். இதைக்கேட்ட சாந்தம்மாவுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது.

**1998 - ஃபிப்ரவரி : சேலையூர் (தாம்பரம்) :**

அம்மாவின் மகள் திருமண ரிஸப்ஷனுக்கு இசை நிகழ்ச்சி ஏற்பாடு செய்வதற்கு சேலையூர் சென்றிருந்த திருமதி நந்தினி அங்கேயுள்ள காயத்ரி ஆலயத்துக்கும் சென்றார். அங்கே அவர் ஆலயத்தின் கேட் அருகில் **டாக்டர்** இருக்கக் கண்டார். இது **டாக்டர்** அவருக்குக் கொடுத்த மூன்றாவது தரிசனம். உடன் **டாக்டரைச்** சந்திக்க கேட்டுக்குள் அவர் நுழைகையில் **டாக்டர்** கர்ப்பக் கிரகத்துக்குப் பின்னால் விரைந்து சென்று விட்டார். நந்தினி அங்கு சென்று பார்த்தார். **டாக்டரைக்** காணவில்லை.இம்முறையும் அவரால் **டாக்டரிடம்** நெருங்க முடியவில்லை..இதைக் கேள்விப்பட்டவுடன், அம்மாவுடன் சாந்தம்மா, வித்யா, ஜானியும் அங்கு சென்றனர். அவ்விடம், விமானப்படை அலுவலர்களுக்கான பிரத்யேகக் காலனி. அங்கே விசாரித்ததில், பலர் **டாக்டரை** அங்கே பார்த்திருந்ததாகக் கூறினர். அருகிலுள்ள விளையாட்டு மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த பையன்களிடம் விசாரித்தபோது, அவர், அவர்களுடன் பேசியதாகவும், முக்கியமாக விளையாட்டைப் பற்றிப் பேசியதாகவும் சொன்னார்கள்.

**1998 - ஃபிப்ரவரி 8ம் தேதி: அம்மா வீட்டில்:**

இத்தினம், அம்மா வீட்டில் உதவியாளராக இருக்கும் மீனா, துணிகளைக் காயப் போடுவதற்காக மேல்மாடிக்குச் சென்றார். அங்கே அவர்,

முன்பின் பார்த்திராத ஒருவர் அமர்ந்திருக்கக்கண்டு திடுக்கிட்டார். வெகுநேரக் குழப்பத்துக்குப்பின் அவர் அம்மாவிடம் இதைக் கூறவும், இருவரும் மேலே சென்று பார்க்கையில் அங்கு அவரில்லை. அம்மாவுக்கு, வந்தவர் **டாக்டராக** இருக்குமோ என்ற சந்தேகம் எழ, மீனாவிடம் **டாக்டரின்** ஃபோட்டோவைக் காட்ட, அவர், "ஆம், இவர் தான் அங்கு இருந்தார்" என்றார். **டாக்டர்** பெருங்குடிப் பக்கம் இருக்ககூடும் என்ற நம்பிக்கையில் அங்கெல்லாம் தேடினர். அங்குள்ள வேம்புலி அம்மன் கோவிலின் அர்ச்சகர், அவர் அங்கு 6ம் தேதி வந்திருந்ததாகக் கூறினார். அருகிலுள்ள டெலிஃபோன் காலனியிலுள்ள ஒரு கோவிலிலும் கண்டதாக அங்குள்ள அர்ச்சகர் சொன்னார்.

**சதாசிவக்கோனே:**

அனந்துவும், கேசவனும் ஆந்திராவிலுள்ள கைலாசக்கோனே என்னும் இடத்துக்கு **டாக்டர்** பற்றி விசாரிக்கச் சென்றனர். அங்கு, மலைமீது பராசக்திக்கு ஒரு கோவிலுள்ளது. அதன் அருகில் ஒரு சமாதியும், சிறிய நீர் வீழ்ச்சியும் அமைந்துள்ளது. அங்கே காணப்பட்ட மூன்று, நான்கு சன்யாசிகளிடம் **டாக்டர்** ஃபோட்டோவைக் காட்டி விசாரித்தனர். அவர்கள், தாங்கள் உணவருந்துமுன் எவருக்கேனும் உணவளித்துவிட்டுச் சாப்பிடும் வழக்கம் கொண்டவர்கள் எனவும், படத்திலுள்ளவர் ஒருநாள் அங்கு சமாதியருகே வீற்றிருந்ததாயும், அவரை அவர்கள் உணவருந்த அழைக்க, அவரும் அதனை ஏற்று அவர்களுடன் உணவருந்தினார் எனவும் உரைத்தனர். அதன் பிறகு அவரைக் காணவில்லை என்றனர்.

* * * * * *

# *தேடல் பயணங்கள்: 2005 - 2007*

**2005 - ஜுலை: அந்தர்கங்கா - கைவாரா :**

ஒரு சப்தாகம் கூடுமலை ஆசிரமத்தில் இச்சமயம் நடைபெற்றது. சப்தாகம் தொடங்குவதற்கு முதல் நாள் ஜானி ஆசிரமத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கையில் அவரறியாமலே ஒரு சினிமாப் பாட்டு மனதுக்குள் ஓடத் தொடங்கியது. அப்பாடலின் நடு வரிகள், “நேற்றொரு தோற்றம் இன்றொரு மாற்றம், பார்த்தால் பார்வைக்குத் தெரியாது, தொடங்கிய பாதையில் தொடர்ந்து வராமல் தூரத்தில் நின்றால் புரியாது.....சிந்தாமணியே வா” என்ற வரிகளே அவை. அம்மாவிடம் கூறுகையில், அவர் அருகிலுள்ள சிந்தாமணிக்குப் போய்ப் பார்த்து வருமாறு கூறினார். ஆகவே, சப்தாகம் முடிந்த பிறகு, அம்மாவின் சொல்படி, சாந்தம்மா, பத்மா, அனந்து மற்றும் ஜானி நால்வரும், சிந்தாமணி செல்லும் வழியில் அந்தர்கங்காவில் **டாக்டர்** முன்பு வழக்கமாக அமரும் ஒரு சிறிய குன்றின் மீதமர்ந்து தியானம் செய்தனர். அச்சமயம் சாந்தம்மாவின் தியானத்தில் அனந்து, சாந்தம்மாவிடம் “2 -12-7” என்று கூறுவதாகக் கண்டார். தியானம் முடிந்து வெளிவருகையில் அவர் மற்றவர்களிடம் இதுபற்றிக் கூற, சிறிய ஆலோசனைக்குப் பின், “**டாக்டர்** 2.12.2007ல் வருவார் என்று தெரிவித்திருக்கிறார்” என நினைத்தனர்.

அதன்பிறகு ஒரு சிறுவனிடம் **டாக்டர்** ஃபோட்டோவைக் காட்டிக் கேட்கையில், அவன், “சிந்தாமணி சென்று விசாரியுங்கள்” என்று கூறினான். திட்டமிட்டபடி நால்வரும் சிந்தாமணி சென்றடைந்து அங்கு விசாரித்தனர். ஆனால் சரிவர பதில் கிட்டவில்லை. அருகிலுள்ள கைவாரா ஆசிரமத்திற்கும் சென்றனர். அனந்துவும், ஜானியும் விசாரிக்கச் சென்றிருக்கையில், சாந்தம்மாவும், பத்மாவும் அருகில் இருந்த ஒரு பெரிய மண்டபத்துக்குள் நுழைய, அதன் முகப்பிலேயே விஸ்வரூப வினாயகர் காணப்பட அவரை தரிசித்தனர். அனந்துவையும், ஜானியையும் அவர்கள் வினாயகரைத் தரிசிக்குமாறு கூற, என்ன விந்தை! அவர்கள் காட்டிய இடம் ஒரு வெற்றிடமாகக் காட்சியளித்தது.

சப்தாகத்துக்கிடையில் ஒருநாள், அம்மாவுடன், சாந்தம்மா, கேசவன்,

ஜானி, ரவி, ஜெயஸ்ரீ, ரோஷிணி, ராஜி முதலியோர் அந்தர்கங்கா சென்றனர். கேசவனைத் தவிர மற்ற அனைவரும் படிகளேறி அந்தர்கங்கா மலைக்குச் செல்லவும், கேசவன் மட்டும் உடல் நிலை கருதிக் கீழேயே தங்கி விட்டார். சிறிது நேரத்திலேயே அவர் சிரமப்பட்டு படிகளேறி மேலே வந்து, **டாக்டர்** கீழேதான் இருந்தார் என்ற செய்தியைச் சொல்லி விரிவாக விளக்கினார். அதாவது, இவர் **டாக்டர்** ஃபோட்டோவைக் காட்டி "பார்த்திருக்கிறீர்களா?" என மசூதியிலுள்ள மதரஸ்ஸா வளாகத்தில் (அடிவாரத்திலேயே அது அமைந்துள்ளது) இருந்தவர்களிடம் கேட்க, அவர்களுள் ஒரு முஸ்லிம் வட இந்தியப் பெண்மணி, (அங்கு வேலை செய்து வருபவர்), கேசவனிடம்," சற்றுமுன்வரை இங்கு இருந்தார். ஒரு காரில் இன்னும் சிலருடன் வந்திருந்தார். Grey கலர் சஃபாரியில், முற்றிலும் ஃபோட்டோவில் உள்ளபடியே காணப்பட்டார். மற்றவர்கள் அங்கமர்ந்து சாப்பிடுகையில் அவர் மட்டும் சும்மா நின்றிருந்தார். பிறகு அவர் காரில் மற்றவர்களுடன் ஏறியதும், அக்கார் தர்க்கா வளாகத்திலிருந்து புறப்பட்டது" என்றார். கேசவன் ஏமாற்றமுற்று வெளி வந்து மீண்டும் வெளியே அங்கு காணப்படுகிறவர்களிடம் விசாரித்துக் கொண்டிருக்கையில், அந்தப் பெண் இவரிடம் ஓடிவந்து, சிறிது தொலைவிலிருந்த ஒரு காரைக் காட்டி, அதில் டாக்டர் ஏறிக் கொண்டு விட்டதாகக் கூறவும், கேசவன் ஓடிச்சென்று பார்க்க, கார் புறப்பட்டுச் சென்று விட்டது. இத்தகவலைக் கேசவன் தெரிவித்ததும், அனைவரும், வேகமாக இறங்கிச் சென்று அப்பெண்மணியிடம் பல கேள்விகள் கேட்டு விளக்கம் பெற்றனர். அவர்கள் விடுத்த கேள்விகளுக்கு நன்கு பதிலளித்த அவர், "போட்டோவில் காணப்படுகிறவரைத்தான் நான் பார்த்தேன். அதில் துளியும் சந்தேகமில்லை" என்றார். மேலும், "அவர் யாரிடமும் ஒரு வார்த்தையும் பேசிக் காணவில்லை" என்றார். அவருக்கு வெகு அருகிலிருந்தும் அவரைப் பார்க்கக்கூட ஒரு பாக்கியம் இல்லையே என்று வருந்தினர். அவர் அனுமதியின்றி அவரைப் பார்ப்பதோ, பேசுவதோ, ஏன், நெருங்குவதோ கூட ஒருவரால் இயலாது என்பது அனுபவபூர்வ உண்மை. அதன்பிறகு, அங்கு செல்லும்போதெல்லாம் அப்பெண்மணியைப் பார்த்துக் கேட்டதில் அதன்பிறகு அங்கு அவர் வரவேயில்லை எனத் தெரிந்தது.

**2007- டிசம்பர் 2: அந்தர்கங்கா - கூடுமலை - கார்த்திகை சோமவாரம்:**

முன்னர் குறிப்பிட்டபடி, 2.12.2007ஐ மனதில் கொண்டு, அன்று அம்மா, சாந்தம்மா, கேசவன், ஜானி, ரவி, ஜெயஸ்ரீ, ரோஷிணி, ராஜி, அனு, ஸ்ரீனிவாசன், மல்லிகா ஆகிய அனைவரும் 11 மணியளவில் அந்தர்கங்காவில் கூடினர். **டாக்டர்**, சிறுவராயிருக்கையில் வழக்கமாக அமரும் சிறு குன்றின் மீதமர்ந்து அனைவரும் தியானம் செய்தனர். அன்றைய மறுதினம் கார்த்திகை சோமவாரம் என்று அப்போதுதான் தெரிந்தது. முன்பொருமுறை அங்கே விசாரிக்கையில் ஒரு காட்டிலாகா ஊழியர், **டாக்டரை** ஒரு கடைசி சோமவாரத்தன்று அவ்விடத்தில் பார்த்திருந்ததாகக் கூறியது நினைவுக்கு வந்தது. அன்று மதியம் மீண்டும் சாந்தம்மா தியானத்திலிருக்கையில் யாரோ ஒருவர் (அவரது தியானத்தில்) மறுநாள் கார்த்திகை சோமவாரம் ஆனதால் கூடுமலை பிள்ளையார் கோவிலுக்கு பஞ்சதீப எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் வாங்கிப் பிரித்துக் கொடுக்கும்படி சொன்னாராம். இதற்குமுன், அன்று காலை ஜானி பெங்களூரிலிருந்து புறப்படுகையில், நிர்மலா (அவரது மனைவி) அவரிடம் வீட்டிலிருக்கும் பஞ்சதீப எண்ணெயை எடுத்துச் செல்லுமாறு கூறியிருக்கிறார். எல்லோரும் தியானத்தில் அமர்ந்திருக்கையில், அனந்துவின் தியானத்தில், அகக் காட்சியில், **டாக்டர்** ஒரு மருத்துவமனை அருகில் நடமாடிக் கொண்டிருக்கக் கண்டார். அம்மருத்துவமனை, ஒரு முறை அனந்துவும், கேசவனும் (ஒரு அகக் காட்சியின் அடிப்படையில்) நேரில் சென்று கண்ட பலமநேர் அருகிலுள்ள ஒரு தொழுநோய் மருத்துவமனையை ஒத்திருந்தது. அன்று, மறுமுறை, மாலை 4.30 மணியளவில் அனந்து தியானிக்கையில், அகக்காட்சியில் டாக்டர் அங்கிருந்து புறப்பட்டு, பஸ் ஏறிச்சென்று, வேறொரு ஊரில், இருட்டான நேரத்தில் ஒரு அரச மரத்தடியில் வந்து கால் மேல் கால் போட்டுக் கொண்டு அமர்ந்திருக்கக் கண்டார். அவ்விடம், கூடுமலை ஆசிரமத்தருகிலுள்ள ஆலமரமாக இருக்கலாம் என்று தோன்றியது. அன்று சத்சங்க தினம் ஆகையால் அம்மா அனைவரையும் உடனே கிளம்பி ஆசிரமத்துக்குச் செல்லலாம் என்றார். போகும் வழியில் கோலாரில் தீப எண்ணெய் கிடைக்கவில்லை.

நேரமாகியதால், அம்மா மறுநாள் முளுபாகலில் வாங்கிக் கொள்ளலாம் என்றார்.

சரியாக 6 மணிக்கு அனைவரும் ஆசிரமத்தில் தியானத்தில் அமர்ந்தனர். ஆசிரமத்திற்கு வெளியே தெரு விளக்கு எரியாததால் ஒரே இருட்டாக இருந்தது. ஆசிரம வாசலில் மின் விளக்கும் எரியாததால், ஒரே இருட்டாக இருந்தது. அம்மாவின் கார் டிரைவர் முனியாண்டி மின் விளக்கைச் சரி செய்தார். சிறிது நேரத்தில் யாரோ ஒருவர், கதவைத்தட்டி யாராவது இருக்கிறார்களா என தெலுங்கில் வினவ, அனந்து எழுந்திருந்து அவரிடம் என்ன விஷயம் எனக்கேட்க, அவர், மறுதினம் கார்த்திகை சோமவாரமாதலால் தீபத்திற்கு எண்ணெய் வேண்டும் எனக் கேட்டார். சாலை இருட்டாக இருந்ததால் வந்தவரின் முகம் அனந்துவுக்குத் தெரியவில்லை. தியானத்தைக் கலைத்துக் கொள்ள விருப்பமில்லாததால், அனந்து அவரிடம், ஐந்து நிமிடம் காத்திருக்குமாறு கூறி தியானத்தில் மூழ்கி விட்டார். அதன் பிறகு அவருக்கு இதுபற்றி மறந்தே போய் விட்டது.

இதற்கிடையில், டீ குடிக்கச் சென்றுகொண்டிருந்த முனியாண்டி, அச்சமயம் வாசலில் உட்கார்ந்துகொண்டிருந்தவரைப் பார்த்து (எண்ணெய் கேட்டு காத்துக் கொண்டிருந்தவரை) ஆச்சரியப்பட்டிருக்கிறார். ஏனெனில், வாசல் விளக்கைச் சரிசெய்துவிட்டு, டெஸ்டெரையும், டார்ச் லைட்டையும் ஆசிரமத்தின் உள்ளே வைக்க வந்தபோது அங்கே **டாக்டரின்** ஃபோட்டோவைப் பார்த்திருக்கிறார். (முனியாண்டிக்கு, **டாக்டர்** எங்கள் குரு என்று தெரிந்திருந்தாலும், **டாக்டரை** முதன்முறையாக இப்போதுதான் ஃபோட்டோவில் பார்க்கிறார்.) வெளியே காணப்பட்ட நபர், உள்ளே காணப்பட்ட **டாக்டரோடு** ஒத்துப்போக, அவர் குழம்பிப்போனார். ஏன் இவர் இப்படித் தனியாக வெளியே அமர்ந்திருக்கிறார் எனக் குழப்பமுற்றார். அவர் டீ குடித்துத் திரும்பிய பின்னர் காணுகையில் அந்நபர் அங்கிருக்கவில்லை. உள்ளேயும் இல்லை. ஆனாலும், மறுநாள் வரை ஏனோ ஒருவரிடமும் ஒன்றும் சொல்லாமல் குழப்பத்திலேயே இருந்திருக்கிறார்.

மறுநாள், அனந்து, சாந்தம்மா, ரவி மூவரும் முளுபாகலுக்கு எண்ணெய் வாங்கச் சென்றனர். இதற்கிடையில், ஒருவர் அம்மாவிடம், சோமவார

தீபத்திற்கு எண்ணெய் கேட்க, அவர், எண்ணெய் வாங்கி வர அனுப்பியிருப்பதாகவும், வந்தவுடன் தருவதாயும் கூறியிருக்கிறார். முளுபாகலிலிருந்து நல்லெண்ணெய் வாங்கி வரப்பபட்டது.

அச்சமயம் அம்மா கெஸ்ட் ஹவுஸ் வாசலில் நின்றிருந்தார். மீண்டும் அந்நபர் எண்ணெய் தருமாறு அம்மாவிடம் சென்று கேட்க, அவர் சற்று தொலைவில் நின்றிருந்த அனந்துவைக் காட்டி, அவரிடம் பெற்றுக் கொள்ளுமாறு கூறியிருக்கிறார். அதற்கிடையில் அனந்துவும் அதனை அறியாது ஆசிரமத்தை நோக்கிச் சென்றுள்ளார். ஆசிரமத்திலிருந்து உடன் திரும்பிய அவரிடம் அந்நபர் எண்ணெய் கேட்கவேயில்லை. இவ்வாறிருக்க, அனந்து, ரவியிடம் ஒருவருக்கு எண்ணெய் கொடுக்கச் சொல்லி அனுப்பியிருந்ததாகவும், தான் அவரைக் கூட்டிக் கொண்டு பிள்ளையார் கோவிலுக்கு அருகிலுள்ள காருக்குச் சென்று எண்ணெயை டிக்கியிலிருந்து எடுத்துக்கொண்டு திரும்பினால் அவரைக் காணவில்லை என்றும் ரவி கூறுகிறார். ஆனால், அனந்து அவ்வாறு எந்த நபரிடமும் கூறியிருக்கவில்லை. இந்தப் புதிருக்கு விடை தெரியவேயில்லை.

அன்று மதியம் இரண்டு மணியளவில் மனச்சோர்வுடன் அனைவரும் ஊர் திரும்பினர். அம்மாவின் கார் டிரைவர் முனியாண்டி, காரில் திரும்பிச் செல்லுகையில், தான் முன்தினம் பார்த்ததைக் கூற, காரில் பயணம் செய்த அம்மாவும், அவருடன் கூடப் பயணித்தவர்களும் அதிர்ந்தனர். மற்றவர்களுக்கும் இதுபற்றித் தெரிவிக்கப்பட, அனைவரும், எண்ணெய் கேட்டு வந்தவர் **டாக்டர்** என்றறிந்தவுடன், தாம் எத்தகைய வாய்ப்பினை, முன் கூட்டியே தெரிவிக்கப்பட்டிருந்தும், இழந்து விட்டோம் என வருந்தினர். **டாக்டரே**, முன்னறிவிப்புடன் கதவைத் தட்டியும் தாள் திறவாது அலட்சியத்தாலும், குழப்பத்தாலும் அவரை ஏற்கத் தவறி விட்டோமே என்று மிகவும் வருத்தத்துக்குள்ளாயினர். ஆயினும் என்ன! அவரோடு சேரும் மற்றொரு வாய்ப்பும் கைநழுவிப் போயிற்று என்பது நிதர்சனம். இதனை, communication gap ஆல் விளைந்த ஒன்று என்பதா, அல்லது, விதி என்பதா, அன்றி, மாயையின் விளையாட்டு என்பதா?

சென்னை சென்று திரும்பிய அனந்துவுக்கு, மணியின் மூலம், தாங்கள்

சென்றது 3 வது கார்த்திகை சோம வாரம் என்றும், கடை(சி) சோமவாரம்,10ம் தேதி என்றும் அறிந்த அவர், **டாக்டரைத்** தேடிச்செல்ல இன்னுமொரு வாய்ப்புள்ளது அறிந்து மகிழ்வுற்றார். அம்மாவிடம் இதனைத் தெரிவித்து விட்டு, பெங்களூரிலுள்ள ஜானிக்குத் தெரிவிக்க, அவரும் முதல் தினம் கூடுமலை வருகிறேனென்றார். கூடுமலை புறப்படுவதற்கு முன் ஒருநாள் அனந்து தியானம் செய்கையில் அவருக்கு **டாக்டரின்** தரிசனம் கிட்டியது. **டாக்டர்** ஒரு மலை அடிவாரத்தில் பாறைச் சரிவில், ஒரு கல்லின் மீது அமர்ந்து, ஒரு நல்ல கட்டுமஸ்தான நபருடன் பேசிக்கொண்டிருக்கிறார். அந்தப் பாறைச்சரிவு மிகவும் வெள்ளையாகத் தெரிகிறது. அருகில் சிறு நீர்க்கசிவு இருக்கிறது. தியானத்தை விட்டு வெளிவந்த அனந்துவுக்கு, கூடுமலையில், மலை மேலுள்ள குகைக்குப் போகும் வழியில் வினாயகர் கோவிலின் பின்புறம் அதுபோல் பார்த்த ஞாபகம் இருக்கிறது. எனவே, 10ம் தேதி போகையில், அங்கும் சென்று பார்க்கலாம் என்று திட்டமிட்டார்.

9ம் தேதி அனந்துவும், ஜானியும் கூடுமலைக்கு வந்தனர். அப்பொழுது பிள்ளையார் கோவிலுக்குச் செல்கையில், அங்கே அர்ச்சனை சாமான்கள் விற்கும் ஒரு கடையில், தான் தியானத்தில் **டாக்டருடன்** கண்ட நபரே இக்கடையில் அமர்ந்திருக்கக் கண்டு ஆச்சர்யமுற்றார். அவரிடம் விசாரித்ததில், அவர் பெயர் நாராயணப்பா என்றும், அவருடைய வீடு ஊருக்குள் இருப்பதாகவும் தெலுங்கில் தெரிவித்தார். சரிவரத் தெலுங்கு பேச வராததால், அனந்து, அவரையும், மற்றும் கெஸ்ட் ஹவுஸ் வாட்ச்மேனையும் ஆசிரமத்துக்கு வருமாறு கேட்டுக் கொண்டார். அவர்கள் வந்தவுடன், தெலுங்கு தெரிந்த, தங்களுக்கு மிகவும் அறிமுகமான குரு என்பவரின் உதவியுடன், அனந்து அவர்களுடன் பேசினார். **டாக்டரின்** ஃபோட்டோவைக் காட்ட, (**டாக்டருடன்** கனவில் காணப்பட்ட) அந்த நபர், ‘ஒரு மாதம் முன்பு, இவரை (**டாக்டரை**) அதே (கனவில் தெரிந்த) இடத்தில் பார்த்ததாகவும், **டாக்டர்**, இவரிடம், மேலே மலைக்கு மூலிகை பறிக்க வரமுடியுமா எனக் கேட்டதாகவும், இவர் மறுத்து விட்டதாகவும் கூறினார். கெஸ்ட் ஹவுஸ் வாட்ச்மேனிடம் **டாக்டரின்** ஃபோட்டோ வைக்காட்ட, அவர், இதே நபர்தான் அம்மாவிடம் கெஸ்ட் ஹவுஸ் வாசலிலிருந்தபோது எண்ணெய் கேட்டதாயும்

அதன் பிறகு அவரைப் பார்க்கவில்லை என்றும் சொன்னார். மேலும், அவர் தியான நிலையில் இருந்ததாயும், யாரிடமும் பேசவில்லை என்றும் கூறினார். இவரது விளக்கமும், அன்று **டாக்டர்**தான் வந்திருந்தார், எண்ணெய் கேட்கும் சாக்கில் தன் சீடர்களிடம் நெருங்கி வர முயன்றார் என்பது மேலும் உறுதியாயிற்று. **டாக்டரை** நேரில் கண்டுப் பழகிய ஒரு சீடரும் அவரது முகத்தைக் கூடப் பார்க்காது அவரைத் தவற விட்டனர். அதன் மூலம் அன்றே அவருடன் சேரும் வாய்ப்பினை இழந்தனர். அதனால் அவர் எத்தனை ஏமாற்றமும், வருத்தமும் உற்றிருப்பார் எனக் கற்பனை செய்து கூடப் பார்க்க இயலாது. இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னரே தேதி, மாதம், வருடமும் தந்திருந்தும் அதனைச் சரிவரக் கருத்தில் கொள்ளாது, கவனமின்றி செயல் பட்டதால் ஏற்பட்ட இழப்பு ஒரு பேரிழப்பே!

***********

# *நேருக்கு நேர் காணல்*

**1996 - ஜூலை - மைதிலி சிவராமன் கண்டது :**

ஒருநாள் மைதிலிசிவராமன் சென்னை அண்ணாநகரிலுள்ள சுந்தரம் ஃபௌண்டேஷன் மருத்துவமனயில் லிஃப்டில் மாடிக்குச் செல்கையில், அவருடன் பயணித்தவரைக் கண்டு அதிர்ச்சியுற்றார். ஆம், அவர் **டாக்டரை**, வழக்கமான சஃபாரி உடையில் கண்டார். அவருடன் வெள்ளையுடை அணிந்த ஒரு மாது, கையில் பைபிள் போல் தோன்றிய ஒரு புத்தகத்துடன் வந்தார். அதிர்ச்சியிலும், வியப்பிலும் வாயடைத்துப் போயிருந்த அவரால் **டாக்டரோடு** ஒரு வார்த்தை கூடப் பேச இயலவில்லை. லிஃப்டிலிருந்து அவர் முதலில் வெளிவர, **டாக்டரும்**, உடன் வந்திருந்த அம்மாதுவும் கூடவே வெளியே வந்தனர். மைதிலி வேகமாக ரூமுக்கு ஓடிச்சென்று அவரது மகள் ஷோபியைக் கூட்டிக்கொண்டு வெளியேவரவும்,

**டாக்டரும்** அவருடன் வந்தவரையும் எங்கும் காணவில்லை. அன்று சத்சங்கமாதலால், மைதிலி சத்சங்கத்துக்கு வந்து அனைவரிடமும் இதனைத் தெரிவிக்கையில் அவரால் அப்போதும் அந்த அனுபவத்தின் தாக்கத்திலிருந்து வெளிப்படாததைக் காண முடிந்தது.

**1996 -அக்டோபர் - 21: மின்சார ரயிலில்:**

அன்று திருநின்றவூரிலிருந்து நரசிம்மன், உஷா, கற்பகம், பானு மற்றும் குழந்தைகளுடன் ரயிலில் பட்டினத்தார் கோவிலுக்குச் செல்லும்போது அதே பெட்டியில் **டாக்டரும்** உடன் பயணிக்கக் கண்டார்கள். அதிர்ச்சியில், எப்படிப் பேசுவது, யார் பேசுவது, என்று திகைத்து நிற்கையில், அடுத்த ஸ்டேஷனில் **டாக்டர்**, அவர்களைத் திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டே சென்று விட்டார்.

**1997- ஏப்ரல்: சென்னை:**

ஜானியின் மகன் ஸ்ரீராம், சென்னை அண்ணாநகரில் தன் வீட்டின் பின்புறத் தெருவில் ஓரிடத்தில் அமர்ந்து கொண்டு எதேச்சையாகப் பார்க்கையில் **டாக்டர்** ஒரு TVS மொபெடில் சென்று கொண்டிருக்கக்கண்டு அதிசயத்துக் குள்ளானான். அவன் **டாக்டரை** நேரில் பலமுறை கண்டிருந்தும் அவரிடம் அவனுக்கு ஒரு ஈடுபாடும் இருந்திருக்கவில்லை. நம்பிக்கையும் கொண்டதில்லை. ஆனால், இன்றும் தான் அன்று கண்டது அவரைத்தான் என்று உறுதிபடக் கூறுகின்றான். அவர் சஃபாரி உடையில், வழக்கமான தோற்றத்தில் அப்படியே பார்த்ததாகக் கூறுகிறான். எத்தனை முறை, தான் கண்டது அவரில்லை என்று தனக்குள் வாதிட்டாலும், அது அவரல்ல எனத் தன்னால் சாதிக்க இயலவில்லை என்கிறான். அத்தகைய ஆழ் நம்பிக்கையை **டாக்டர்** விதைத்திருக்கிறார். அத்தகைய impression ஐ (பதிவை) அவன்போல், அவரைச் சந்தித்த பலபேரிடம் **டாக்டர்** உண்டாக்கியிருப்பதைக் காணமுடிந்தது. அதன்பிறகு, ஒரு சில மாதங்களுக்குப் பின்னர், ஒரு நாள் இரவு 7 மணியளவில், ஜானியின் மகன்கள், கார்த்திக்கும், ஸ்ரீராமும் வேளச்சேரி பஸ் நிறுத்தம் அருகிலுள்ள டீக்கடையிலுள்ள ஃபோனில் பேசக்

காத்திருக்கையில், அவர்களுக்கு முன் ஃபோன் செய்துகொண்டிருந்தவர் அச்சாக **டாக்டர்** போலவே தோற்றமளிக்க, ஸ்ரீராம், கார்த்திக்கிடம் கேட்க, அவனும், "ஆம், **டாக்டர்தான்**" என்று உறுதிசெய்தான். அவரும் அதற்கேற்றாற்போல், "**டாக்டர்** என்ற முறையில் நான் என்ன சொல்கிறேன் என்றால்" என்று பேசிக்கொண்டிருந்தார் யாரிடமோ! அவரது பேச்சில் ஒரு assertion, இருந்தாலும், அதில் concern தொனித்ததாக ஸ்ரீராம் உணர்ந்தான். அன்று அவர் ஒரு லுங்கி அணிந்திருந்தாராம்.

**1997 - ஜுலை : அடையார்:**

ஒருநாள், சாந்தம்மாவுடன் அருகிலுள்ள அவர் வீட்டுக்குச் செல்கையில், ஜானியும், நிர்மலாவும், அடையார் டிப்போ அருகில் சாலையைக் கடக்கையில், மூவரும் ஒரே நேரத்தில் சிறிது தூரத்தில் **டாக்டரும்** சாலையைக் கடக்கக் கண்டனர். ஆனாலும், அவரை நெருங்க முடியவில்லை. மற்றொரு நாள், அனந்துவும், சாந்தம்மாவும் இந்திரா நகர் செல்லும் வழியில் அடையார் டிப்போவுக்கருகில் அவரைப் பார்த்தனர்.

**1997- செப்டம்பர் : பங்காரப்பேட்டை ஸ்டேஷன்** :

கூடுமலையிலிருந்து சென்னைக்குத் திரும்புகையில், பங்காரபேட்டை ஸ்டேஷனில், மீனாட்சி, மாலினி, ஸ்ரீலக்ஷ்மி, மைதிலி ஆகியோர் காத்திருக்கையில், அங்கே பிளாட்ஃபாரத்தில் சிறிதே தொலைவிலுள்ள ஒரு கடையில் **டாக்டர்** நின்றிருக்கக் கண்டு அவரை நோக்கி மீனாட்சியும், ஸ்ரீலக்ஷ்மியும் செல்லவும், அதற்கிடையில் **டாக்டர்** கடைக்குப் பின்புறம் திரும்பவும், அவர்கள் அங்கே சென்றுக் காண்கையில் **டாக்டர்** அங்கிருக்கவில்லை.

**1998 – நவம்பர் - 2 :ரிஷிகேஷ்:**

அம்மா தனியாக ரிஷிகேஷுக்கு இத்தினம் வந்தடைந்தார். காலை 8 மணியளவில் லக்ஷ்மண் ஜுலாவைக் கடந்து கங்கையின் மறுகரை வழியாக அவர் செல்கையில், சுமார் முப்பது அடி தூரத்தில் நான்கைந்து

யாத்திரீகளுக்கிடையில் **டாக்டர்** வரக் கண்டார். **டாக்டர்** இவரைக் கண்டும், அவரது முகத்தில் எந்த ஒரு சலனமுமில்லை. ஒரு பத்தடி தூரம் இருக்கையில் அவர் மறைந்து அவர்களுள் ஒருவராக ஆனார். ஆதலால் அம்மாவால் அவர்களுள் எவருக்குள் **டாக்டர்** ஐக்கியமானார் என்பது தெரியவில்லை. ஆனால் அவர் கண்டது நூறு சதம் **டாக்டர்**தான் என்பதில் அவருக்குச் சந்தேகமில்லை.

### 2001 – டிசம்பர் - 27: பெசன்ட் நகர் சர்ச்:

சாந்தம்மா இத்தினத்தில், மாலை 6-30 – 7-30 மணி வரை பெஸண்ட் நகர் சர்ச் வளாகத்தில் **டாக்டருடன்** நேரில் உரையாடிய சம்பவம் இது. இச்சமயத்தில் அவர் சில நாட்களாகவே அடிக்கடி அந்தச் சர்ச்சுக்குச் சென்று தியானம் செய்து வந்தார். அதுபோல், 27 ம் தேதி, அவர் தியானத்தை முடித்த பின்பு, 6.30 மணிக்கு சர்ச் வாசற்படியில் அமர்ந்து, தனக்குள், "**டாக்டர்**, ஆறரை வருஷங்கள் ஓடிவிட்டது. எப்போது வரப் போகிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டிருக்கையில், ஒருவர் அவரைக் கடந்து செல்ல, சாந்தம்மா ஏதோ ஒரு உந்துதலில் அவரை மேல் நோக்கிப் பார்க்க, அவர் அச்சாக **டாக்டர்** போலிருந்தார். சர்ச்சில் அப்போது பாடிக்கொண்டிருந்த பாடல். "கர்த்தரே, உமது வருகைக்காகக் கண்ணீர் மல்கக் காத்திருக்கிறோம்" என்பதாய் இருந்தது. அந்நபர் அவர் அருகில் வந்தமர்ந்தார். அருகில் அவரைக் காணவும், அவர் **டாக்டர்**தான் என்ற எண்ணம் அவருக்கு உறுதியாயிற்று. அந்நபர், "ஏனம்மா, எதிரிலுள்ள ஜீசஸ் சர்ச்சுக்குப் போக மாட்டீர்களா?" என்று பேச்சுக் கொடுத்தார். "ஒரு முறைதான் போயிருக்கிறேன். அங்கு சென்றால், ஜீசஸ் crucification நினைவுக்கு வருவதால் மனம் மிகவும் கனமாகி விடுகிறது" என்று சாந்தம்மா பதிலளித்தார். அந்நபர், "இந்திராநகர் பெந்தகோஸ்தே சர்ச், original வேளாங்கண்ணி சர்ச் எல்லாம் போயிருக்கிறீர்களா?" என்றெல்லாம் வினவினார். மேலும், "நீங்கள் ஹிந்துவா, கிறிஸ்துவரா?" எனக் கேட்டார். தான் ஹிந்து என்று சாந்தம்மா பதிலளிக்க, மேலும் அந்நபர், "ஏம்மா, இங்குள்ளவர்கள் எல்லாம் true கிறிஸ்தவர்களா?" என்று கேட்கவும், அவர் தெரியாது என்று பதில் சொன்னார். "முஸ்லீம்களும் சரியாகவா

நடக்கிறார்கள்? ஹிந்துக்கள், கேட்டதைக் கொடுத்தால் கடவுள், இல்லையென்றால் வெறும் கல் என்கிறார்கள். எவன் ஒருவன் சத்தியம், தர்மம், நேர்மை கொண்டு நடக்கிறானோ அவன்தான் true கிறிஸ்டியன், true முஸ்லிம், true ஹிந்து" என்று சொல்லி விட்டுச் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். சாந்தம்மா அந்நபரிடம், "நீங்கள் ஹிந்துவா, கிறிஸ்டியனா?" எனக் கேட்டார். அதற்கு அந்நபர் ஆணித்தரமாக, நான் பக்கா பிராம்மணன்" என்றார். "பின் ஏன் சர்ச்சுக்கு வந்திருக்கிறீர்கள்?" என்று சாந்தம்மா வினவ, "அதுதான் சொன்னேனே, பக்கா பிராம்மணனென்று" என்று சொல்லிவிட்டு மௌனமானார். **'பிரம்மத்தை உணர்ந்தவன்தான் பிராம்மணன்'** என்று **டாக்டர்** சொன்னது சாந்தம்மாவுக்கு நினைவுக்கு வந்தது. சாந்தம்மா, அந்நபர் எங்கிருக்கிறார் எனக்கேட்டதற்கு, தான் டில்லியிலிருப்பதாயும், தற்சமயம் சென்னை வந்திருப்பதாயும், எங்கு வேண்டுமானாலும் போய் வருவாரென்றும், சமீபத்தில் வாடிகனுக்கும், வேளாங்கண்ணிக்கும் சென்றுவந்ததாகவும் கூறினார். தனக்கு 62 வயது ஆகிவிட்டதாயும், எழும்பூர் அருகே வேலை பார்த்ததாயும், தற்போது வேலையிலில்லை என்றும் சொன்னார். சாந்தாம்மாவின் குடும்பத்தைப் பற்றியும் விசாரித்தார். ஒன்றும் தெரியாததுபோல் கேட்கிறாரே என்று சாந்தம்மாவுக்குத் தோன்றியது. "அமெரிக்காவில் குழந்தைகள் வயதுக்கு வந்தவுடன் அரசாங்கமே வேலை தருகிறது. பையனோ, பெண்ணோ காதல் திருமணம் செய்து கொள்கிறார்கள். ஆனால், இந்தியாவில், பையன் வேண்டும், பெண் வேண்டும் என்று பெற்றுக் கொள்கிறார்கள். அதன் பிறகு, கல்யாணம் பண்ணணும், பேரன் பேத்தி பார்க்கணும் என்று ஒரு binding ல் மாட்டிக் கொள்கிறார்கள். நான் எதிலும் bindஆக மாட்டேன். போய்க்கொண்டே இருப்பேன்" என்றவர், திடீரென்று கிளம்புவதாகச் சொல்லிப் புறப்பட்டார். அவரைத் தொடர்ந்து சென்ற சாந்தம்மாவின் குறுக்கே சில வண்டிகள் வந்ததால் அவரால் பின்தொடர முடியாது போக, அங்கே அவரைக் காணவில்லை. **டாக்டர்** எவ்வாறெல்லாம் பேசுவாரோ, நினைப்பாரோ, அவ்வாறெல்லாம் இவரும் பேசியதும், அவர் நடந்து கொண்ட விதமும் அந்நபர் **டாக்டர்** தானென்று உறுதியாக அவருக்குப்பட்டது.

## 2002 – அம்மா - கும்பகோணம் அருகே :

தன் மகள் நாட்டிய நிகழ்ச்சிக்காக அம்மா கும்பகோணம் சென்றிருக்கையில், அப்போது மேடைக்கருகில் நின்றுகொண்டு பார்வையார்கள் பக்கம் திரும்பியபோது, கொஞ்ச தூரத்தில், பின்னால் ஒரு நாற்காலியில் **டாக்டர்** அமர்ந்திருக்கக் கண்டார். அருகில் போனாலும் சந்திக்க முடியாது, உருவத்தை மாற்றிக் கொள்வார் என்று நினைத்து மானசீகமாக வணக்கம் தெரிவித்துக் கொண்டார். அவரைச் சிரமத்துக்கு ஆளாக்க வேண்டாம் எனக்கருதி அம்மா அவர் பக்கம் செல்லவில்லை.

**கேசவன் அனுபவம்:**

கேசவன் ஒரு பெரியவருடன் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை நினைவு கூர்கிறார். அவர் விவரிக்கும் இந்த அனுபவம் எப்போது நிகழ்ந்தது என அவருக்கு நினைவில்லை. அப்பெரியவர், தான் ஏரிக்கரைப் பகுதியில் வசிப்பதாகச் சொன்னார். ஆனால் அவர் எப்படி அறிமுகமானார் என கேசவனால் சொல்ல முடியவில்லை. அந்நபர், வேட்டியும், மிகவும் பெரிய அரைக்கைச் சட்டையும் அணிந்திருந்தார். கையில் ஒரு ஊன்றுகோல். **டாக்டருக்கும்**, அவருக்கும் எந்த ஒரு உருவ ஒற்றுமையும் இல்லை. ஆனால் அவர் பேசிய விதமும், பழகிய விதமும், **டாக்டர்** இந்நபர் மூலம் தன்னிடம் பேசுகிறார், அல்லது தோற்றத்தை மாற்றிக் கொண்டு உரையாடுகிறார் என்று கேசவனுக்குத் தோன்றியது. கேசவனது வேண்டுகோளுக்கிரங்கி அவர் சிலமுறை கேசவன் வீட்டில் உணவருந்தினார். அவர், “நீ நிறையப் பேச வேண்டும். பேசுவாய். நிறையப் பேர் கேட்பார்கள்” என்றார். ஒரு ஊன்றுகோல் வாங்கித் தரும்படிக் கேட்க, கேசவன் அவருக்கு அதை வாங்கிக் கொடுத்தார். தன்னிடம் இருந்ததை கேசவனிடம் விட்டுச் சென்றார். (ஆனால் அதை இப்போதுக் காணவில்லை). தொடர்ந்து வந்துகொண்டிருந்த அப்பெரியவர் ஒருநாள் சொல்லிக் கொள்ளாமலேயே காணாமல் போனார். அவர் சொன்ன ஏரிக்கரைப் பகுதியில் கேசவன் விசாரித்தபோது அவர் பற்றிய தகவல் ஏதும் கிட்டவில்லை. யாரும் அவரைப் பார்த்ததாகச் சொல்லவில்லை.

அப்பெரியவரிடம் கேசவன் வித்தியாசமாகப் பார்த்தது, அவரது கண்களும், பேசும் விதமுமே. **டாக்டர்**தான் அந்த உருவத்தில் தன்னிடம் தொடர்பு கொண்டார் என்பதில் கேசவனுக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை.

**ஜானி :**

பல்வேறு இடங்களில் சென்னையிலும், பெங்களூரிலும் ஜானி நேருக்குநேர் பார்த்த சந்தர்ப்பங்களுள் அவருக்கே சந்தேகத்திற்கிடமின்றி தான் கண்டது **டாக்டர்தான்** என்று தனக்கு திருப்தியேற்பட்ட சில நிகழ்வுகள் மட்டும் இங்கே குறிப்பிடப்படுகிறது:

**மோபரீஸ் சாலை:**

ஒரு நாள் மாலை 5 மணியளவில், ஜானி ஸ்கூட்டரில் சென்று கொண்டிருக்கையில் எதேச்சையாகப் பக்கவாட்டில் பார்க்கையில், **டாக்டர்** ஒரு மொபெட் வண்டியின் பில்லியனில் அமர்ந்துகொண்டு, தன்னையே பார்த்துக்கொண்டு வருவதைக் கண்டார். இவரும் வாகனத்தை ஓட்டிக்கொண்டே அவரையே பார்த்துக்கொண்டு வந்தார். ஆனால் அவர் வழக்கத்தை விடச் சற்று குள்ளமாகக் காணப்பட்டார். "அவராக (**டாக்டராக**) இருக்குமோ, அவராக இருக்குமோ?" என்று தனக்குள் பேசிக்கொண்டு பயணிக்கையில் **டாக்டர்** சென்று கொண்டிருந்த வண்டி மோபரீஸ் ( T.T.K.) ரோடின் வலப்புறமாகவும், ஜானியின் வண்டி இடப்புறமாகவும் திரும்பியது. அவராக இருக்குமோ என நினைத்துக்கொண்டு வருகையில் அவருக்கு நேர் எதிராக ஒரு சரக்கு மினி வண்டி 'அவர்' (AVAR) என்ற ஆங்கில எழுத்துடன் வர, அவருக்கு, இப்படியும் ஒரு பெயருடன் லாரி இருக்குமோ என்று ஆச்சர்யத்தைத் தந்ததோடல்லாமல், தான் கண்டது **டாக்டரைத்தான்** என்றும் உறுதி செய்தது. நல்ல சந்தர்ப்பத்தை இழந்த வருத்தம் அவரைத் தாக்கியது. மறுநாள் வேறு இடத்தில் 'அவர்' என்ற பெயர் கொண்ட மினி லாரியைக் கண்டார். அது, உண்மையாகவே இப்பெயருடன் ஒரு லாரி இயங்கி வருவதை உறுதி செய்தது!

இவ்விடத்தில் ஒன்று குறிப்பிடவேண்டியுள்ளது. **டாக்டர்**, சில

சமயங்களில் அச்சாக அதே வடிவிலும், அதே உயரத்துடனும், சிலபல சந்தர்ப்பங்களில் சற்றுக் குள்ளமாகவும், ஏன், வழக்கத்தை விட நல்ல உயரமாகவும் தோன்றுவார். அச்சாக அவரது முகச்சாயலுடன் தோற்றமளிக்கும் அவரை நெருங்குகையில் வித்தியாசமான முகத்தோற்றத்துடன் மாறிவிடுவார். இதுபோன்ற அனுபவங்கள் சீடர்கள்களுக்குப் பொதுவில் ஏற்பட்டிருக்கிறது. ஒருவேளை, சீடர்கள் தன்னை நெருங்கக்கூடாது என நினைத்தும் அவர் அவ்வாறு செய்திருக்கலாம். ஏன், ஒரு சில சந்தர்ப்பங்களில் ஜானி தைரியத்துடன் அவரை நெருங்கி, அவர் **டாக்டர்**தானா எனக் கேட்டிருக்கிறார். அப்போது வேறு பெயர், அதுவும், வைஷ்ணவக் கடவுளின் ஏதாவது ஒரு பெயரைச் சொல்லிக் குழப்பிவிடுவார். பல சந்தர்ப்பங்களில் அவருள் ஒரு பயத்தை அல்லது தயக்கத்தை ஏற்படுத்தி நெருங்கவிடாது செய்துவிடுவார். முட்டாள்தனமாக இயங்கவைத்தும் திசை திருப்பி இருக்கிறார் ஜானியின் விஷயத்தில். அதன் பின்னர் செய்திகள் மூலம் கேலியும் செய்திருக்கிறார்!

**டெய்லர்ஸ் ரோடு - கீழ்பாக் கார்டன் சாலை:**

ஜானி மற்றொரு சமயம், மாலையில் அலுவலகத்திலிருந்து வீடு நோக்கிச் செல்லுகையில் பச்சையப்பன் கல்லூரி எதிரிலுள்ள புதிய ஆவடி ரோடில் திரும்பும்போது தன் பின்னால் வாகனத்தில் பயணித்தவரை ஏனோ தனது வண்டியை நிறுத்தித் திரும்பிப் பார்க்க, அதிசயித்துப் போனார். ஆம், அவர் கண்டது **டாக்டரை. டாக்டர்** வழக்கத்தைவிட மிக உயரமாக , ஆறரை, ஏழடி உயரமாக இருக்கலாம், அதே ஒல்லியாக, மற்ற எந்தவித மாற்றமுமில்லாது, சஃபாரி உடையில் இருந்தார். அவரது ஸ்கூட்டர், ஒரு மிகப்புதிய பஜாஜ் சேடக் வாகனம். அவர் இவரைப் பார்க்க, இவர் அவரைப் பார்க்க, நேரம் ஒடிக்கொண்டிருந்தது. ஜானிக்கு, அவரது உயரத்தைப் பார்த்து, இவர் **டாக்டரோ**, வேறு யாராயிருக்குமோ எனச் சந்தேகம் தாக்கியதால் அவருடன் பேசத் தயக்கம் கொண்டார். அவரும் இவரையே, ஒன்றும் பேசாமலும், புறப்பட முயற்சிக்காமலும்-,ஏதோ ஜானியின் அனுமதி கிடைத்தால்தான் அவரைக் கடந்து செல்ல இயலும் என்பது போல் அப்படியே

ஸ்கூட்டருடன் சாலையின் ஓரமாக நின்று கொண்டிருக்கிறார். அவர் **டாக்டரல்லாது** வேறு யாராக இருந்திருந்தால் அந்நபர் அவ்வாறு வெறுமனே நின்றிருக்கக் கூடுமோ? இப்படிச் சில நிமிடங்கள் சென்றன. அப்பொழுது ஏனோ ஜானிக்கு, **டாக்டர்** திரும்பி பூந்தமல்லி ஹைரோடில் செல்வார் என்று தோன்ற, (ஏன் அப்படி வினோதமாக நினைத்தார்) அவர் தனது ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்து நியூ ஆவடிச் சாலையில் சென்று, கீழ்ப்பாக்கம் கார்டன் சாலையின் வலது புறம் திரும்பி, அங்கிருந்து டைலர்ஸ் ரோடில் சென்று மீண்டும் பூந்தமல்லிச் சாலையைச் சென்றடைந்தார்! அங்கு சென்றபிறகு, தான் எப்படிப்பட்ட முட்டாள்தனமான செயலைச் செய்தோம் என்று அவருக்குத் தெரிந்தது. இவ்வளவு சிரமப்படாமல் அவரிடமே அவர் **டாக்டர்தானா** எனக் கேட்டிருக்கலாம். அல்லது, என்னதான் ஆகிறது என்று பொறுத்திருந்து பார்த்திருக்கலாம். ஒர் நல்ல சந்தர்ப்பத்தை நழுவிட்டதற்கு அவர் மனம் பல நாட்கள் படாதபாடு பட்டது. 'ஏன் **டாக்டர்** இப்படிப்பட்ட ஒரு லாயக்கற்ற ஒருவனைத் தத்தெடுத்து நேரத்தையும், சக்தியையும் வீணடித்துக் கொண்டிருக்கிறீர்கள்? வேறு யாராவது தகுதியானவரைச் சீடனாக ஏற்றிருந்தால் உங்களுக்கும் உபயோகமாக இருக்குமே!' என்றெல்லாம் மனம் வருந்தினார். (இதுபோல் பலமுறை வருத்தத்துக் குள்ளாகியிருக்கிறார்). இங்கே ஒன்று குறிப்பிட வேண்டும். **டாக்டர்** தான் இப்படிச் செயல் பட வைக்கிறார், மனதைக் குழப்பியும், பயத்தை உண்டாக்கியும்-தன்னிடம் நெருங்காமலிருப்பதற்காகவோ?. எதற்கும் காலம் கைகூட வேண்டுமல்லவா!

**ஐ சி ஃப் காலனி :**

ஒரு நள் இரவு, 8 மணி வாக்கில் ஜானி பெரம்பூரிலிருந்து அண்ணாநகர் நோக்கித் திரும்புகையில், அயனாவரம் ரயில்வே காலனிக்குள், சைக்கிளில் ஒருவர், **டாக்டர்** போன்று அதே அச்சாக, வெள்ளை பேண்ட், வெள்ளை சட்டையுடன் வரவும், அவரும் இவரைப் பார்க்க, ஜானிக்கு இவர் **டாக்டர்தான்** என்று உள்ளுணர்வு கூற, அவரிடம், **டாக்டர்** நித்யானந்தம் தானே எனக் கேட்க, அவர் தனது பெயரைக் கூற, அது ஒரு வைணவப் பெயராக இருந்தது. ஜானி கூறுகிறார்- பல இடங்களில் இவ்வாறு தைரியத்தை வரவழைத்துக்

கொண்டு கேட்டபோதெல்லாம், அவர்கள் கூறும் பெயர்கள் எல்லாம் வைணவப் பெயர்களாகவே இருந்தன!

## இந்திராநகர் - மத்ய கைலாஸ்: (ஃபிப் '98)

**டாக்டர்** தாம்பரம் I.A.F. குவார்டர்ஸ் வளாகத்தில் காணப்பட்ட நேரம் அது. ஒருநாள், ஜானி சாந்தம்மாவின் இந்திராநகர் வீட்டிலிருந்துப் புறப்பட்டு சிறிது தொலைவு கடக்கையிலேயே தன்னை ஒருவர் தன் புல்லட் பைக்கில் அதிவேகத்தில் கடந்து போனது கண்டு அந்நபரை நோக்குகையில் அவர் **டாக்டர்** எனத் தெரிந்தது. அவரைப் பிடிக்க வேண்டி இவரும் தன் ஸ்கூட்டரில் அதிவேகமாகப் பயணித்து அவரைக் கடக்க முயன்றார். ஆனாலும் அவரைத் தாண்டிச் செல்ல இயலவில்லை. சாயங்காலம் ஆதலால் வாகனப் போக்குவரத்து கடுமையாக இருந்ததும், **டாக்டரின்** அதிவேகமும் காரணம். **டாக்டருடன்** கூடச் சென்றவர்களுக்கு அவரின் வேகம் நன்கு தெரியும். எனினும், அவரைப் பின் தொடர்ந்து ஜானி அவரை மத்ய கைலாஷ் அருகே நெருங்குகையில் அவர் சிக்னலைக் கடந்து சென்று விட்டார். கிட்டத்தட்ட முக்கால் கிலோமீட்டர் அவரைத் தொடர்ந்திருப்பார். அவ்வண்டியின் எண்ணை ஜானி குறித்து வைத்துக் கொண்டார். இவ்விஷயத்தை அம்மாவிடமும், மற்றவர்களிடமும் ஜானி கூறினார். மறுநாள், கேசவன் டாக்டரைத் தேடி விமானப்படை அலுவலர் குடியிருப்புக்குச் செல்கையில், ஒரு பைக் மெக்கானிக்கிடம், **டாக்டரைப்** பார்த்திருக்கிறார்களா என விசாரிக்கையில், ஜானி முன்தினம் **டாக்டர்** ஓட்டிச் சென்ற வண்டியைக் கண்டிருக்கிறார். மெக்கானிக்கிடம் இதுபற்றிக் கேட்க, அவர் சரிவர பதில் தரவில்லை.

## குரோம்பேட்டை - பல்லாவரம் ஸ்டேஷன்:

1998 மார்ச் முதல் ஞாயிறன்று ஜானியும், நிர்மலாவும், வெங்கடராமன் வீட்டில் நடக்கவுள்ள சத்சங்கத்துக்கு தாம்பரம் நோக்கி மின்வண்டியில் சென்றார்கள். ரெயில் பல்லாவரத்துக்கு வரும்போது எதேச்சையாக (அல்ல, **டாக்டர்** எதையும் காட்ட நினைத்தால் பார்க்க வைப்பார் என்பது

அனுபவபூர்வ உண்மை) பிளாட்ஃபாரத்துக்கு வெளியே இருவருமே நோக்குகையில், **டாக்டர்**, வெள்ளை நிறச் சட்டை, வெள்ளை நிறப் பேண்டில் ஸ்டேஷன் நோக்கி வரக் கண்டனர். ஆனால் ரெயில் புறப்பட்டு விட்டதால் அவர்களால் அங்கு இறங்க இயலவில்லை. ஆனாலும் அவர்கள் மீண்டும் தாம்பரத்திலிருந்து பல்லாவரத்துக்கு மற்றொரு வண்டியில் பின்னோக்கிப் பிரயாணித்து அங்கு இறங்கினர். அதற்குள் கால்மணி நேரம் ஆகிவிட்டதால் அவரைப் பார்க்க முடியவில்லை.

**கீழ்பாக்கம் கார்டன் சாலை :**

ஒரு நாள் காலை ஜானி அலுவலகத்துக்கு தனது ஸ்கூட்டரில் செல்லுகையில், கீழ்பாக் கார்டன் ரோடில் ஒரு இடத்தில் தன்னைக் கடந்து சென்ற அம்பாஸிடர் காரின் முன் பக்கத்தில், ஓட்டுனர் அருகே வழக்கமான உடையிலும், தோற்றத்திலுமாக **டாக்டர்** அமர்ந்திருக்கக் கண்டார். அக்கார் இடது புறம் உள்ள ஒரு தெருவில் நுழைய, ஜானியும் தொடர்ந்தார். ஒரு வீட்டருகே காரிலிருந்து அவர் இறங்கினார். **டாக்டர்தான்**, ஆனாலும் ஜானிக்கு ஒரு தயக்கமும் பயமும் ஏற்பட, அவர் ஏதும் அவரிடம் கேட்காது அலுவலகத்திற்குச் செல்லலானார். இச்சமயம், அத்தெருவிலேயே ஒரு போஸ்டரில், ‘அறியாப் பையன்’ என்ற (டப்பிங் படமோ?!) போஸ்டர் ஒட்டியிருக்கக் கண்டார். அது தன் செயலை கேலி செய்வது போல் அவருக்குத் தோன்றியது. ஆனால் அவரது மனசாட்சி, கடமை தவறியதால் அவரைக் குடைந்தெடுத்தது என்றார்.

**பெங்களூர் - R.T. நகர் :**

ஜானியும், நிர்மலாவும் தங்கள் வீட்டு வாசலில் புதியதாய்த் தோன்றிய கைனடிக் ஹோண்டா ஸ்கூட்டரில் வேகமாக ஒருவர் செல்லக் கண்டு, அவர் **டாக்டர்** போல் இருக்கிறதே என ஒத்தாற்போல் நினைத்தனர். மீண்டும் அந்நபர் திரும்பவும் அவர்களை விரைந்து கடந்து சென்றார். ஆதலால் அவர்களால் அவரிடம் பேச முடியவில்லை.

**பெங்களூர் - Langford garden :**

ஜானி, J.P. நகரிலிருக்கையில், ஒரு நாள் காலை இவ்வழியாகச் செல்லுகையில் ஒரு காரில் முன்புறம் **டாக்டர்** அமர்ந்து சென்று கொண்டிருக்கக் கண்டார். அவர்தான் என்று உறுதியாகப் பட்டது அவருக்கு. தயக்கத்தின் காரணமாக இம்முறையும் தவற விட்டு, பின்னர் வருந்தினார்.

**பெங்களூர் - K.R.புரம் –10.03.2011:**

அன்று ஜானி குறடுமலை செல்லவேண்டி, கிருஷ்ணராஜபுரம் பஸ்நிலையத்திற்கு எதிரிலுள்ள பஸ்நிறுத்தத்திற்குச் சென்று கொண்டிருக்கையில், அவருக்கு எதிரில் **டாக்டர்** போன்றே அச்சாக ஒருவர் வந்து கொண்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியும், வியப்புமாய் அவரையே பார்த்துக்கொண்டு அவரை நெருங்கினார். அந்நபர் அருகில் வரவும், ஜானி அவரை நிற்குமாறு கேட்க அவரும் நின்றார். ஜானி அவரிடம், “நீங்கள் எங்கள் குருநாதர் போலவே அச்சாக இருக்கிறீர்கள். நீங்கள் எங்கள் குரு **டாக்டர்** நித்யானந்தம் தானா?” எனவும், அவர் இல்லையென்பது போல் தலையசைத்தார். ஜானி மேலும் அவரிடம், “எங்கள் குரு பல வருடங்களுக்கு முன்னர் இமாலயம் சென்று விட்டார். நாங்கள் அவரைத் தேடிக் கொண்டு வருகிறோம். நீங்கள் அவரைப் போலவே இருக்கிறீர்கள்” எனவும் அவர் மெல்லிதாகச் சிரித்தார். அவர் எங்கு வசிக்கிறார் என்று ஜானி கேட்கவும், தான் அல்சூரில் வசித்து வருவதாக பதிலளித்தார். அவர் எங்கே வேலை செய்கிறார் என ஜானி கேட்க, தான் ரயில்வே அலுவலகத்தில் வேலை செய்து வருவதாகக் கூறினார். கேட்கப்பட்ட கேள்விகளுக்கு மாத்திரமே ஒரு வார்த்தையில் பதிலளித்து வந்த அவர், தானாகவே முன்வந்து, “என் அலுவலகம் அதோ பஸ் நிறுத்தம் அருகில் செல்லும் சாலையில், கடைசியில் இருக்கிறது” என்றார். மீண்டும் ஜானி அவரிடம், “நீங்கள் அப்படியே முற்றிலும் எங்கள் குருவை ஒத்திருக்கிறீர்கள்” எனவும், அவர் மென்மையாகச் சிரித்தார். அவரிடம் அவரது பெயர் என்னவென்று ஜானி கேட்க ‘வாசுதேவன்’ என்று பதிலுறுத்தார். (இதுவரை ஜானி பல சந்தர்ப்பங்களில் **டாக்டரை** ஒத்திருந்த நபர்களிடம் அவர்களது பெயரைக் கேட்க, அவர்கள் கூறும்

பெயர்கள், விஷ்ணுவின் ஆயிரம் நாமங்களில் ஒன்றாகவே இருந்திருக்கிறது.) இதற்கு மேலும் என்ன கேட்பது என்று புரியாத நிலையில் ஜானி அவரிடம் விடைபெற்றுக்கொண்டார். இங்கு குறிப்பிடப்பட வேண்டியது-அவரது உயரம், நிறம், முன்-பின்-நேர்த் தோற்றம், சாயல், அதிர்ந்து பேசாத-மென்மையாகப் பேசும் விதம், ஒரு வித அமைதி, இவையனைத்தும் முற்றிலும் **டாக்டரை** ஒத்திருந்தது. சீடர்கள் **டாக்டரை** 1995ல் கடைசியாகப் பார்த்தபோது அவரது வயது 58.ஒரு வியப்புக்குரிய விஷயம் என்னவென்றால்,அன்று, **டாக்டரை** அவரது 58 ஆவது வயதுத் தோற்றத்தில் எப்படி ஜானி பார்த்திருந்தாரோ அதே வயதுத் தோற்றத்தில் இன்று இவரிருக்கக் கண்டார். ஆனால் அவரது உடை மட்டும் வித்தியாசமாகப் பட்டது. ஆரஞ்சு நிறத்தில் வரிகளிட்ட ஜிப்பா, பிஜாமாவுடன் காணப்பட்டார். நெற்றியில் விபூதி, குங்குமம் தரித்திருந்தார். ஜானிக்கு அவர் **டாக்டர்** தான் என்று நூறு சதவீத நம்பிக்கை ஏற்பட்டது. அவர் சாலையின் அப்புறத்தைக் கடக்க தேவைக்கும் அதிகமான நேரத்தை எடுத்துக் கொண்டு, இடையிடையே ஜானியின் திசை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர்களுக்கிடையே இருநூறு அடி இடைவெளி இருக்கும்.

இதே நேரத்தில் தூரத்தில் நின்று கொண்டிருந்த அவரைப் பார்த்துக் கொண்டே சாந்தம்மாவிடம் ஜானி இதை விவரிக்க, அவர் உடனே அம்மாவிடம் கூற அம்மா ஜானியை ஃபோனில் கூப்பிட்டார். ஜானி விவரங்களைத் தெரிவிக்க, அம்மா ஜானியை உடனடியாக அவர் வேலை செய்து வருவதாகக் கூறிய அலுவலகத்திற்கு சென்று மீண்டும் அவரைக் கண்டு அவரது ஃபோன் நம்பர், மற்றும் விலாசத்தைப் பெற்று வருமாறு சொன்னார். ஜானி அவரது அலுவலகத்திற்குச் சென்றார். செக்யூரிட்டி அறையில் உள்ள பார்வையாளர்கள் பதிவேட்டில் ஒப்பமிட்டப் பிறகே உள்ளே செல்லமுடியும். ஜானி அவ்வாறு செய்துவிட்டு, அங்கிருந்த செக்யூரிட்டியிடம் ‘வாசுதேவன் எந்தப் பிரிவில் வேலை செய்கிறார்’ எனக் கேட்க, அங்கு அமர்ந்திருந்த ஒருவர், “வாசு என்று கேளுங்கள். அவர் ஸ்டோர்ஸ் செக்க்ஷனில் வேலை செய்கிறார்”. என்று எதிரிலுள்ள கட்டிடத்தைக் காண்பித்தார். ஜானி அங்கு படியேறி ஹாலுக்குச் செல்கையில், மாடி ஏறு

முன்னரே, வாசுதேவன் இறங்கி வந்து எதிர் கொண்டார். ஜானிக்கு ஆச்சர்யம், எப்படி தான் வரும் நேரம் தெரிந்து சரியாகக் கீழிறங்கி வந்து நிற்கிறார் என்று. அவரிடம் ஜானி, “மன்னிக்கவும். மீண்டும் வந்து உங்களைத் தொந்திரவு செய்வதற்காக. உங்களைப் பார்த்ததிலிலிருந்து எங்கள் குரு ஞாபகமாகவே இருக்கிறது. உங்களைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. அதனால்தான் வந்தேன்” என்றார். அதற்கு அவர், ‘பரவாயில்லை’ என்பது போல் தலையாட்டினார். அவரிடம் ஜானி, அவர் தியானம் ஏதாவது செய்து வருகிறாரா எனக் கேட்க, அவரது பதில் ஜானிக்குப் புரியவில்லை. அவரது பதிலளிக்கும் விதம் மிகவும் மென்மையாக இருப்பதைக் காண முடிந்தது. அவரிடம் ஜானி அவரது ஃபோன் நம்பரைக் கேட்க, அவர், “ஞாபகமில்லை. நான் நம்பரை வீட்டிலேயே மறந்து வைத்து விட்டு வந்து விட்டேன்” என்றார். அவரது இப்பதில் ஜானிக்கு விசித்திரமாகப்பட்டது. மனமில்லை எனப் புரிந்ததால் ஜானி அவரது வீட்டு விலாசத்தைக் கேட்கவில்லை. மேற்கொண்டு என்ன பேசுவது என்று புரியாது ஜானி அவரிடம் விடை பெற்றுக்கொண்டார். ஏமாற்றமும், குழப்பமும் அவர் மனதை ஆக்கிரமித்துக் கொண்டது. இம்முறை அவரைக் காண்கையில், முகத்தில் சிறிய மாற்றத்தைக் கண்டார். ஆனாலும் மற்ற எல்லாவிதத்திலும்-தோற்றத்திலும், பேசும் விதத்திலும் அப்படியே **டாக்டரை** ஒத்திருந்தார். அம்மாவிடம் நடந்தவற்றை எடுத்துரைத்து விட்டு அவர் குறடு மலைக்கு புறப்பட்டுச் சென்றார்.

அம்மாவின் அறிவுரைப்படி, ஜானி, மறுநாள் (11.03.2011) காலை கிருஷ்ணராஜபுரம் வந்தடைந்து நேராக அவரது அலுவலகத்திற்குச் சென்று, கையொப்பமிட்டு, மாடியில் வாதேவனைக் காணச் சென்றார். அவரது அலுவலக அறையை எட்டுமுன்னரே வாசுதேவனே வெளி வந்து ஜானியை எதிர்கொண்டார். இம்முறை அத்தகையப் பாணியில் வேற்றுடையை அணிந்திருந்தார். ஜானி அவரிடம், “ தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள். மீண்டும் உங்களைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. எங்கள் குருவின் சாயலில் நீங்கள் உள்ளதால் உங்களைப் பார்க்க வேண்டும் போலிருந்தது” என்றார். அவர், “கடவுள் காப்பார்” என்றார். அவரிடம் ஜானி, “நீங்கள் எங்கள் குருவைப் போலவே இருக்கிறீர்கள். எங்கள் குரு பல வருடங்களுக்கு முன்னர்,

உலகைப் பொருத்தவரை மறைந்து விட்டார். ஆனாலும் அவர் பல இடங்களில் எங்களுக்கு நேரில் தோன்றியிருக்கிறார், இதோ உங்களைப் போல. ஆனால்,கேட்கும் போதெல்லாம், தான் அவரில்லை எனக் கூறிவிடுவார். நீங்கள் எங்கள் குரு டாக்டர் நித்யானந்தம் தானா?" எனக் கேட்க "ஆம்' என்றார். இப்பதிலால் ஜானிக்கு மகிழ்ச்சி ஏற்பட்டாலும், அவர் சரியாகப் புரிந்துகொண்டுதான் சொல்கிறாரா என்று ஊர்ஜிதம் செய்து கொள்ள மீண்டும் இக்கேள்வியைக் கேட்க "ஆம்' என்ற அவர், "கடவுள் காப்பாற்றுவார்" என்றார். ஜானிக்கு ஒன்றும் புரியவில்லை. எதை எடுத்துக் கொள்வது? ஆகவே, அவர் வாசுதேவனிடம்," உங்களுக்கு குரு யாராவது இருக்கிறார்களா? ஏதேனும் ஆன்மிக ஸ்தாபனத்தில் இருக்கிறீர்களா?" எனக் கேட்க, அவர், "எனக்கு எந்த குருவிடமும் நம்பிக்கை கிடையாது. நான் நேரடியாகக் கடவுளிடம் கேட்டுக் கொள்வேன்" என்றார். அவரது அப்பதில் மேலும் ஜானிக்குக் குழப்பத்தை ஏற்படுத்தியது. ஜானி அவரிடம், "எங்கள் குரூப்பில் ஓரிருவர் உங்களைப் பார்க்க அனுமதிப்பீர்களா?" எனவும், அவர், "அலுவலகத்தில் யாரும் எளிதில் நுழைய முடியாது. சாத்தியமில்லை" என்றார். ஜானி அவரிடம், வேறு ஒரு பொதுவான இடத்தில் சந்திக்கலாமே எனக் கேட்டார். அதற்கு அவர், தான் எவரையும் சந்திப்பதில்லை எனவும், அவருக்கு நண்பர்கள் என்று யாரும் கிடையாது என்றும் ஆகவே இயலாது என்று சொல்லி மறுத்து விட்டார். என்ன செய்ய! வேறு வழி தெரியாது, ஜானி அவரிடம் நன்றி கூறி விடை பெற்றார். இங்கு குறிப்பிடத் தக்கது, அவரை ஜானி இரு முறை அலுவலகம் சென்று பார்த்தும் அவர் சிறிது கூட முகம் சுளிக்காது, அதை ஒரு உபத்திரவமாகக் கருதாது சிரித்த முகத்துடனே வரவேற்றார்!

ஜானிக்கு ஏமாற்றம் தொற்றிக் கொள்ள, இம்முறையும் தோற்றோமே என்ற கழிவிரக்கம் ஏற்பட்டது. அம்மாவிடம் நடந்தவற்றைத் தெரிவித்தார். பார்த்துப் பேசக்கூட மறுத்து விட்டாரே என்று அம்மாவும் வருத்தப்பட்டார்.

இத்தருணத்தில் ஒன்று நினைவுக்கு வருகிறது. **டாக்டர்** சீடர்களிடம் அடிக்கடிக் கூறுவார், **"எந்தக் கோளும் (கிரகங்களும்) என் அனுமதியின்றி உங்களைத் தீண்டாது"** என்று. மேலும் ஓரிரு சந்தர்ப்பங்களில் அவரது

கிளினிக்கில் இருக்கையில், **“நீங்கள் என்னுடன் இந்தக் கிளினிக்குக்குள் இருக்கும் வரை மாயையிலிருந்து விடுபட்டு இருக்கிறீர்கள். நீங்கள் கிளினிக்கை விட்டு வெளியேறியவுடன் மீண்டும் மாயை உங்களைத் தொற்றிக் கொள்ளும்”** என்பார்.

ஆக, மாயையே தன் பிடிக்குள் வைத்திருக்கும் குருவானவர், தங்களை இத்தகைய மாயைக்குள் பல தருணங்களில் சிக்கவைத்துத் தப்பியிருக்கிறார் என்பது சீடர்களது அனுபவபூர்வ உண்மை. மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சியிலும், வாசுதேவன் **டாக்டராக** இருந்தும் காரணம் கருதி, “நான் அவரில்லை” என்று கூறிக் குழப்பியிருந்தாலும் அது சாத்தியமே. இம்முடிச்சு அவிழும் வரை காத்திருப்பதைத் தவிர சீடர்கள் என்ன செய்யக் கூடும்?

* * * * * *

## முத்துக்குமார் அனுபவங்கள் : (சென்னை).

**முதல் அனுபவம்** : **25.12.2008** :

**டாக்டரின்** சீடர் முத்துக்குமார், அன்று காலை தாமரையில் (ஆனந்த ஜோதியின் பொது தியானமையம்) தியானம் செய்யக் கருதி காரில், ஏனோ வழக்கமான பாதையைத் தவிர்த்து, வேறு சாலையில் பயணித்தார். அதற்கான காரணம் அவருக்குப் பின்னால்தான் புலப்பட்டது. சிறிது தூரம் கடக்கையில், **டாக்டரைக்** கண்டார். ஆனால் அவரோ இவரைப் பார்க்காதது போல் இருந்தார். காரை அப்படியே நிறுத்திவிட்டு **டாக்டரை** நெருங்க, அவர் நடக்கத் தொடங்கி சாலையைக் கடந்து எதிர்திசை நோக்கிச் செல்லலானார். முதுக்குமாரும் அவரைத் தொடர்ந்து சென்றார். எதிர்திசையடைந்து அவர் ஒரு கடையை ஏனோ உற்று நோக்கிக் கொண்டிருந்தார். பின்னர் இவர் பக்கம் லேசாகத் தலையைத் திருப்பி நோக்கிவிட்டு மேலும் நடக்கலானார். முதுக்குமாரும் விடாது அவரைப் பின் தொடர்ந்தார். பின் வலதுகை ஆள்காட்டி விரலை முன்நோக்கிக் காட்டியவாறு ,அவரைப் பின் தொடர்ந்து

வருமாறு சமிக்ஞை செய்வதுபோல் முன் சென்றார். அவரும் **டாக்டரைப்** பின் தொடர்ந்தார். ஓரிடத்தில் **டாக்டர்** நிற்க, முத்துக்குமாருக்கு காரைப் பூட்டாமல் விட்டு வந்தது நினைவுக்கு வர, காரை எடுத்துக் கொண்டு வந்து அவரையும் ஏற்றிக் கொள்ளலாம் என நினைத்து காரை நோக்கிச் சென்றார். **டாக்டர்** தொடர்ந்து நடந்து செல்வதைக் கண்டார்.. ஆனால் ஒரு சிக்னல் வர, **டாக்டர்** இடது புறம் திரும்ப, சிக்னல் விழுந்ததால் இவர் வலது புறமாகத் திரும்ப வேண்டி நேரிட்டது. திரும்பிப் பார்த்தால் **டாக்டரைக்** காணவில்லை. ஒரு நல்ல வாய்ப்பை இழந்தது அவருக்கு மிக்க வருத்தத்தைத் தந்தது.

**இரண்டாவது அனுபவம் : 06.02.2009:**

மேற்கண்ட அனுபவத்தை கேசவன் வீட்டில் எழுதிக் கொடுத்துவிட்டு முத்துக்குமார் ஸ்கூட்டரில் அலுவலகம் செல்கையில், ராஜாஜி பவன் எதிரிலுள்ள சாலையில் திரும்பிச் செல்லுகையில் அங்கு மீண்டும் **டாக்டரைக்** கண்டார். பதற்றத்திலும், பரவசத்திலுமாய் அவர் **டாக்டரைத்** தாண்டிச் சென்றுவிட, மீண்டும் ‘U’ Turn எடுத்து அவரருகில் வண்டியை நிறுத்தினார். அவர் பேசுமுன் **டாக்டரே** சிரித்தபடி, “என்ன பேசணும்? பேசுங்க” என்றார். இவர் “நமஸ்காரம் **டாக்டர்**” என, பதிலுக்கு அவரும் “நமஸ்காரம்” என்றார். “நீங்கள் தானே **டாக்டர்** நித்யானந்தம்?” எனக் கேட்டார். “நான் **டாக்டர்** நித்யானந்தம் இல்லை, நான் வேறு மனிதன்” என்று ஆங்கிலத்தில் பதிலளித்தார். முத்துக்குமார் அதிர்ந்து போனார். “என்னுடைய குரு **டாக்டர்** நித்யானந்தம் உங்களை மாதிரியே இருப்பார்” என்றார். அதற்கு அவர், “நீங்கள் பார்க்கிற ஆள் நான் இல்லை” என்றார்.“அப்போ நீங்க யாரு? உங்க பேரு என்ன? எங்கிருக்கிறீங்க?” என அவரைப் போலவே வேகமாகக் கேட்டார்.

“நான் பிரசன்ன குமார்” என்றார். “எங்கிருக்கிறீங்க?” என்று மறுபடியும் முத்துக்குமார் கேட்க, அவர் கூலாக, “நான் அசோக் நகரில் இருக்கிறேன்” என்றார். அவர் இவ்வாறு பதிலளித்ததும் முத்துகுமாருக்கு அழுகை வந்தது. தனக்குத் தெரிந்த **டாக்டர்** தானே எதிரில் வந்து நின்றார். ஏன் இல்லை

என்கிறார் என்று மனம் குமுறினார். அவர் வெகு வேகமாக முன்னோக்கி நடந்தார். இப்பொழுது தென்றல் போல் நடையில்லை. வழக்கமான சஃபாரி உடையில், வழக்கமான தோற்றத்தில், வழக்கமான இத்யாதிகளில் தான் காணப்பட்டார். குரலும் வழக்கமான **டாக்டரின்** குரல்தான். ஆனாலும் தானில்லை என மறுக்கிறாரே என்ற ஆற்றாமையிலிருந்து அவரால் விடுபட்டு வெளிவர முடியவில்லை.

**மூன்றாவது அனுபவம்: 25.01.2011:**

அன்று முத்துக்குமார் தன் மனைவியை, அவரது அலுவலகத்தில் விடும் பொருட்டுக் காரில் அவருடன் சென்று கொண்டிருக்கையில் வழியில் ஓரிடத்தில் **டாக்டர்**, எதிரில் தென்றலென நடந்து வந்து கொண்டிருக்கக் கண்டார். வியப்பும், மகிழ்ச்சியும் ஏற்பட, தன் மனைவியிடம், “**டாக்டர்** வருகிறாரம்மா!” எனச் சொல்ல, அவரது மனவியும் அவரைக் கண்டு, “ஆமாம்!” என்று ஆமோதித்தார். முத்துக் குமார் காரை இடது புறமாக நிறுத்திக் கொண்டிருக்கையில் **டாக்டர்** அவரைக் கடந்து சென்று விட்டார்.

அவசர அவசரமாகக் காரை விட்டிறங்கி அவர் எங்கிருக்கிறார் என்று முத்துக்குமார் கிலேசத்துடன் தேடிக்கொண்டிருக்க, **டாக்டர்** ஒரு கடையின் முன்பு நின்று அங்கிருந்த பத்திரிகைகளைப் பார்த்துக் கொண்டிருக்கக் கண்டார். உடனே முத்துக்குமார் விரைந்து அவரருகில் சென்று நின்றார். தானே அவருடன் பேச்சுக் கொடுக்கலாமா, அல்லது அவரே தன்னிடம் பேசத்துவங்குவாரா என்ற குழப்பத்தில் முத்துக்குமார் **டாக்டர்** அருகிலேயே சிறிது நேரம் நின்று கொண்டிருந்தார். இச்சமயம் அவர் முத்துக்குமார் பக்கம் திரும்ப, ”நமஸ்காரம்” என்று முத்துக்குமார் சொல்லவும், அவரும், “நமஸ்காரம்” என்றார். பின்னர் இருவரும் சிறிது நேரம் உரையாடினர். அப்போது **டாக்டரிடம்**, முத்துக்குமார் தன்னை ‘ஞாபகம் இருக்கிறதா, இருமுறை இதற்கு முன்னர் சந்தித்திருக்கிறோமே’ எனவும், அவர் தனக்கு ‘நினைவில்லை என்றும், எங்கே பார்த்திருக்கிறோம்’ என்று கேட்டார். அதற்கு முத்துக்குமார், “முதன் முறை 25.12.2008ல் திருவான்மியூரிலும், அடுத்தமுறை, 06.02.2009ல் ராஜாஜிபவன் எதிரிலும் சந்தித்திருக்கிறோம்” என்றார். “அப்படியா?,

இருக்கலாம். நீங்கள் எங்கிருக்கிறீர்கள்? என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?” என்று விசாரித்தார். முத்துக்குமார் அவருக்குத் தன்னைப் பற்றியும், குடும்பத்தைப் பற்றியும் எடுத்துக் கூறினார். அதைக் கேட்ட **டாக்டர்** புன்முறுவல் பூத்தார். முத்துக்குமார் அவரிடம், “தாங்கள் பிரசன்னகுமார், பெசன்ட் நகரில் இருக்கிறீர்கள் அல்லவா? (உண்மையில்) தாங்கள் எங்கள் குரு **டாக்டர்** தானே?” எனக் கேட்டார். இதைக் கேட்ட அவர், தான் **டாக்டரில்லை** எனவும், தான் ஒரு ஜர்னலிஸ்ட் என்றும் சொன்னார். அதற்கு முத்துக்குமார், “நீங்கள் தோற்றத்தில் எங்கள் குருநாதர் போலவே இருக்கிறீர்கள். உங்களைப் பார்க்கையில் எனது குருவின் ஞாபகமும், அவருடன் இருந்த நாட்களும் என் கண் முன் நிற்கிறது” என நெகிழ்ச்சியுடன் கூறினார். ஆனால் அவர் முத்துக்குமாரிடம், “நீங்கள் தேடும் நபர் நானில்லை” என்றார். பிறகு, முத்துக்குமாரது செல் ஃபோன் எண்ணைக் கேட்டார். தனது நம்பரைக் குறித்துக் கொடுக்க முத்துக்குமாரிடம் பேனாவோ, பேப்பரோ இல்லாததால், **டாக்டர்** அவரிடம் தனது செல்ஃபோன் நம்பரைக்கூறி அதற்கு அழைப்புக் கொடுக்குமாறு கூற முத்துக்குமாரும் அவ்வாறே செய்தார். நம்பரும் பதிவாயிற்று. அவரைத் தனது செல்ஃபோனில் ஃபோட்டோ எடுக்க வேண்டும் என்ற சிந்தனையுடன் இருக்கையில், அதை எடுக்குமுன்னரே அவர், “சரி, போய்விட்டு வருகிறேன். பிறகு சந்திப்போம்” என்று சொல்லி விட்டு வெகு வேகமாகச் சென்றுவிட்டார். அவரைச் சந்தித்தது, அவருடன் உரையாடியது இவையெல்லாம் முத்துக்குமார் உள்ளத்தில் தாக்கத்தையும், ஏக்கத்தையும் ஏற்படுத்தியது. அவரை மீண்டும் எப்போது சந்திக்கலாம் என்ற தவிப்பில் முத்துக்குமார் அவருக்காகக் காத்திருக்கிறார்!

### 2010 - ஆகஸ்ட் : ராஜி:

**டாக்டரது** சிஷ்யை ராஜிக்கு, **டாக்டர்** தன் இருப்பை ஒரு மூன்றாம் நபர் மூலம் தெரிவித்த ஒரு செய்தி இது. (ஒரு வேளை ராஜிக்கு, **டாக்டர்** உயிருடன்தான் இன்னமும் இருக்கிறாரா என்றோ, அல்லது **டாக்டரைக்** காண வேண்டும் என்ற ஆவலில் இருந்ததாலோ என்னவோ!) அன்று கண்ணன் பிறந்த தினம்-கோகுலாஷ்டமி. காலை அவரது வீட்டிற்கு வசூல்

செய்யவேண்டி கேபிள் ஆபரேட்டர் வரவும், அவரை ராஜி அமரும்படிச் சொல்லி, 'டீ வேண்டுமா' எனக் கேட்க, அவரும் சரி யென்று சொல்ல, ராஜி தேநீர் தயாரித்துக் கொடுத்தார். அச்சமயம், அந்நபர், ஹாலில் மாட்டப்பட்டிருந்த **டாக்டரது** ஃபோட்டோவைக் காட்டி, "அதில் இருப்பவர் யார், உங்கள் உறவினரா?" எனக்கேட்டார். ராஜி,' ஃபோட்டோவிலிருப்பவர் தனது குருநாதர்' என்று சொல்லவும், அந்நபர், தான் மூன்று, நான்கு மாதங்களுக்கு முன்பு மருதமலை மேலுள்ள பாம்பாட்டிச் சித்தர் பீடத்தருகே அவரைப் பார்த்திருந்ததாகச் சொன்னார். அது கேட்டு வியப்புற்ற ராஜி, "நீங்கள் பார்த்தது இவரைத்தானா? நிச்சயமாகச் சொல்கிறீர்களா?" என்று சந்தேகத்துடன் கேட்க, அவர், "உறுதியாகச் சொல்வேன், இவரைத்தான் நான் பார்த்தேன்" என்று சொன்னார். ராஜி அவரிடம், "எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்கிறீர்கள்? 3-4 மதங்களுக்குப் பின்னும் எப்படி உங்களுக்கு ஞாபகத்தில் இருக்கிறது?" எனவும், அவர், "ஏனென்றால், கிட்டத்தட்ட ஒருமணிநேரம் நான், எனது நண்பர்களுக்காகக் காத்திருக்கையில், அவரது அருகிலேயே நின்றிருந்தேன். அவர் நான்கைந்து பேருடன் நின்று கொண்டே பேசிக்கொண்டிருந்தார். ஏனோ அவர் அடிக்கடி என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். நானும் அதுபோல் அடிக்கடி அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். அதனால் எனக்கு நன்கு நினைவிலுள்ளது" என்றார். ராஜி, "சரி, இந்த விஷயத்தை, நான் சொல்லும் ஒருவரிடம் அப்படியே சொல்வீர்களா?" என்க, அவரும் சரியென்றார். உடனே ராஜி அம்மாவுடன் ஃபோனில் தொடர்பு கொண்டு நடந்ததைச் சொல்ல, அம்மா அவரிடம் இது பற்றி விவரமாகக் கேட்கவும், அந்நபரும் அதற்கெல்லாம் சரிவர பதில் சொன்னார். அவர் பதிலில் திருப்தியுற்ற அம்மாவும் "அவர் சொல்வதெல்லாம் உண்மைதான்" என்று ராஜியிடம் கூறினார். பின்னர், ராஜி கேபிள் ஆபரேட்டரிடம் அவர் எங்காவது **டாக்டரைக்** காண நேரிட்டால் உடனே நேரில் வந்தோ, அல்லது ஃபோன் மூலமாகவோ தெரிவிக்கும்படிக் கேட்டுக் கொண்டார். இது ராஜிக்கு கிடைத்த ஒரு மறைமுக அனுபவம் எனலாம்.

• * * * *

# *பின்னுரை*

சுருக்கமாகச் சொல்வதானால், **டாக்டரே**, பல்வேறு காலகட்டங்களில் தாம் எங்கெங்கெல்லாம் இருந்திருந்தாரோ, அவ்விடங்களையெல்லாம் தம் சீடர்களுக்குப் பல முறைகளில் காண்பித்து அவ்விடங்களுக்கெல்லாம் அவர்களைப் பயணம் மேற்கொள்ளச் செய்து, அங்கெல்லாம் அதற்கான சாட்சியங்களையும் நிலை நாட்டி, எல்லாச் சீடர்களுக்கும், தான் எங்கும் போகவில்லை, தான் அவர்களுடன் தான் இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்தியுள்ளார் என்பதே உண்மை. அவர்களுக்கு (சீடர்களுக்கு) சில சந்தர்ப்பங்களில் **டாக்டரால்** முன்கூட்டியே தெரிவிக்கப் பட்டிருந்தும் அவரைச் சந்திக்க இயலாது போயிற்று. அதுபோல் **டாக்டரின்** சீடர்களுக்கும், சீடர் அல்லாதவருக்கும் கூட **டாக்டர்** பல இடங்களில் தம்மைக் காட்டியருளியிருக்கிறார்.

இவையனைத்தும், (செய்திகளும், செய்திகள் உண்மையே என ஊர்ஜிதம் செய்திருக்கும் நேரடிச் சாட்சியங்களும்) **டாக்டர்** இன்னமும் பௌதிக வடிவில் இருக்கிறார் என்பதையே உறுதிப்படுத்துகிறது. அவர் வெளி வந்து விட்டார்-(உலகறிய) வெளியே தான் வரவேண்டி யிருக்கிறது என்பதே உண்மை. சீடர்களும், **டாக்டரது** அளவற்ற சக்தியை அறிந்த, ஆனால் சீடரல்லாதவரும் அன்னாரது வருகைக்காகக் காத்திருக்கிறார்கள்.

**அந்நாளும் வரும்!**

**விரைவில் அப்பொன்னாள் வரப் பிரார்த்திப்போம்!**

***"உன் அருளும் வையத்தில் உன் வரவும்***
***உண்டானால் சென்மத்தாலேது துயர்".***

**- அருட்குறள்**